KIDStory®

KIDStory is a program of

kids around the world

# இயேசுவின் கதை

தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள். சங்கீதம் 145:4

Unless otherwise indicated, all Scripture quotations are from The Holy Bible, New Century Version□. Copyright © 2005 by Thomas Nelson, Inc. Used by permission. All rights reserved.

©Kids Around the World 2016
katw.net

# கிட்ஸ் ஸ்டோரி & ஸ்டோரி கிளப்பிற்கு வரவேற்கின்றோம்

**தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள். சங்கீதம் 145:4**

உங்கள் சமுதாயத்தின் பிள்ளைகளை அணுகி இயேசுவின் திரைப்படம் மூலம் சீடராக்க நீங்கள் எடுத்த தீர்மானத்திற்காக மகிழ்கிறோம். உலகம் முழுவதும் பல லட்ச மக்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய இத்திரைப்படம் இப்பொழுது பிள்ளைகளுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப் பெற்றுள்ளது.

பிள்ளைகள் இயேசுவை அறியக்கூடிய சூழ்நிலையை உருவாக்க தலைவர்களை பயிற்சிவித்த ''கிட்ஸ்டோரி''யின் யுக்தியின் ஒரு பகுதியாக இந்த கையேடு அமைந்துள்ளது. இந்த கையேட்டில் நீங்கள் கண்டுபிடிக்கும் காரியங்கள், வேதத்தை நீங்கள் போதிக்கும் முறையில் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தும் என்று நம்புகிறோம். மேலும் அவருடைய வார்த்தை மற்றும் ஆவியினால் உங்கள் வாழ்க்கையும் மறுரூபமடையும். பிள்ளைகள் தூரத்து பார்வையாளர்களாக மட்டும் இல்லாமல், தேவனின் கதையை நேரில் கண்ட சாட்சியாகவும் துடிப்புள்ள பங்கேற்பாளராகவும் மாறுவார்கள். ''கிட்ஸ்டோரி'' இயேசு கற்பித்த முறைமையை சார்ந்தது: கதை சொல்லுதல், அனுபவங்களின் கலந்து உரையாடல் மற்றும் அர்த்தமுள்ள விவாதங்கள்.

இந்த யுக்திகள் கற்பதற்கும் பயன்படுத்துவதற்கும் பிறருடன் பகிர்ந்துக்கொள்வதற்கும் எளிதானது. தலைவர்கள் அறிவுரை அளிப்பதைவிட அவர்கள் கவனமாய் கேட்க கற்பிக்கப்படுகிறார்கள்... பரிசுத்த ஆவியானவருக்கும், பிள்ளைகளின் பதில்களுக்கும் செவி கொடுத்து, அவர்களும் தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுக்கவும் கீழ்படியவும் உற்சாகப்படுத்துங்கள். தலைவர்கள் எழுப்பும் கேள்விகளும் கலந்துரையாடல்களும் தகவல்களை அறிந்து கொள்வதற்கு மாத்திரமல்ல, ஆனால் பரிசுத்த ஆவியானவர் இதயத்தையும் சிந்தையையும் மறுரூபப்படுத்தவும் உதவும். 'கிட்ஸ்டோரி' என்பது தேவன் தமது கதையினாலும் தமது ஆவியினாலும் ஒருவரின் வாழ்க்கை, குடும்பம் மற்றும் முடிவில் ஒரு சமுதாயத்தையே மறுரூபடுத்துவதாகும்.

---

**முக்கிய அம்சங்கள்**

தலைவர்களை பயிற்சிவிப்பதானாலும், பிள்ளைகளின் குழுவை தலைமை தாங்குவதானாலும், கிட்ஸ்டோரியின் ஒவ்வொரு நிலையிலும் குறிப்பிட்ட சில காரியங்களை உங்களால் காண முடியும். தேவன் யார்? தாங்கள் யார்? (அவர்களின் நோக்கமும் மதிப்பும்) மேலும் இயேசுவோடு உண்மையான தனிப்பட்ட உறவு கொள்வது எப்படி? என்பதை பிள்ளைகள் கற்றுக் கொள்ளக்கூடிய சூழலை உருவாக்க விரும்புகிறோம். இவை அனைத்தும் பின்வரும் முக்கிய அம்சங்களை செயல்படுத்தும் போது நிகழும் என்று நம்புகிறோம்:

- **வேதத்தை மையப்படுத்துதல்:** பிள்ளைகளுக்கு போதிப்பதற்கும் தலைவர்களை பயிற்சிவிப்பதற்கும் ஒவ்வொரு பாடத்திலும் வேத கதைகள் முக்கியமானவை. தேவன் யார்? அவரை பின்பற்றுவது எப்படி? என்று தொடர்ச்சியாக அனைத்துமே அந்த கதையை சுற்றித்தான் இருக்கும்.
- **கேளிக்கை:** இந்த சத்தியங்கள் பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஒட்டிக்கொள்ள விரும்புகிறோம். இதை நடப்பிக்கவும், பிள்ளைகளை ஈடுபடுத்தவும் கேளிக்கை விளையாட்டு தேவைப்படுகிறது. எங்கே கேளிக்கை மற்றும் சிரிப்பும் இருக்கிறதோ அங்கே பிள்ளைகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவதுடன், தன்னுடன் தன் நண்பர்களையும் அழைத்துவர விரும்புவார்கள்.
- **மேம்படுத்துதல்:** 'கிட்ஸ்டோரி' எளிமையும் நடைமுறைக்குரியதாயும் இருக்கிறது. இந்த யுக்தியை பயன்படுத்தி பிள்ளைகள் தாங்கள் கேட்ட கதையை குடும்பத்தினரிடமும் நண்பர்களிடமும் மறுபடியும் கூறுவது எப்படி என தலைவர்கள் காண்பிக்க முடியும்.
- **தொடர்ப்புடைதல்:** இயேசுவிடம் பிள்ளைகள் நெருக்கமடைய செய்யும் பல காரியங்களில், மிக முக்கியமான ஒன்று உறவு கொள்ளுதல். கதையை கற்பிப்பது மட்டுமல்ல, ஆனால் பிள்ளைகளை பற்றியும், அவர்கள் இதயத்தையும், ஆத்துமாவையும் குழப்பும் காரியம் என்ன என்றும் அறிந்து கொள்ள வேண்டும்.
- **ஆவியால் நடத்தப்படுதல்:** இயேசு தாம் கற்பித்த அனைத்தையுமே வெளிப்படுத்தக்கூடிய பரிசுத்த ஆவியானவரை நமக்கு வாக்களித்திருக்கிறார். இந்த பரிசுத்த ஆவியானவரே வாழ்க்கையை மறுரூபப்படுத்தக் கூடியவர். அவர் நடத்தும் பாதையில் நாம் கவனித்து முன்செல்ல வேண்டும்.

## ஸ்டோரி கிளப்ஸ்

இயேசு சிருஷ்டித்தது போலவே, பிள்ளைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நேசிக்கப்பட்டு தங்கள் தலைவர்களின் ஆசீர்வாதத்தையும் தேவனின் ஆசீர்வாதத்தையும் பெற்ற உணர்வை தரக்கூடிய சூழல் இருக்கிறதா?

**பிள்ளைகள் கேளிக்கை அனுபவித்து,** அவர்கள் கற்றுக்கொண்டதையும் அனுபவங்களையும் விடுதலையோடு பகிர கூடிய இடம் தான் இது. பிள்ளைகள் ஏதோ ஒரு புத்தகத்திலிருந்து கற்றுக் கொள்வது மாத்திரம் அல்ல, ஆனால் உறவு கொண்டு பழகுவதின் மூலமும் கற்றுக் கொள்கிறார்கள். இங்கே அவர்கள் பாதுகாப்பாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகவும் உணர்வதால் மற்றவர்களையும் அதை போன்றே நடத்துகிறார்கள். பிள்ளைகளை ஆவிக்குரிய வாழ்க்கையில் நடத்துவதைப் பற்றி பெற்றோர்களும், தலைவர்களும் கற்றுக்கொள்வதற்கு ஏற்ற பாதுகாப்பான இடம் இந்த ஸ்டோரி க்ளப்-தொடர்ச்சியாக ஆயத்தப்படுத்தி உற்சாகப்படுத்தும் இடம்.

**ஸ்டோரி கிளப்பானது:** வசதியான எந்த இடத்திலும் நேரத்திலும் ஒன்று கூடலாம். அதற்கு தலைவர்களே ஏற்ற பெயரை சூட்டலாம். எது இந்த ஸ்டோரி க்ளப்பை சிறப்பிக்கும் என்றால், அதன் 5 முக்கிய அம்சங்களே. ஸ்டோரி க்ளப்பில் வேதாகம கதைகள் கேளிக்கை கலந்த புது விதமான முறையில் விவிலிய நோக்கம் தவறாமல் கூறப்படுகிறது. தேவனின் கதையை கூறுவது இன்றியமையாதது தான், ஆனால் அது மட்டும் போதாது. அது கவனமாக செவிக் கொடுப்பதை பற்றியதும் கூட --- ஆவியானவருக்கும் ஆவியானவர் தனது இதயத்தை எப்படி ஊந்துகிறார் என்பது பற்றி பிள்ளைகள் கூறும்போதும் செவிக் கொடுக்க வேண்டும்.

**தேவனின் கதையை கூறுவதற்கும்** அதை திரும்ப கூறுவதற்கும் பயன்படுத்தப்படும் முறைகள், பரிசுத்த ஆவியானவர் பிள்ளைகளின் இதயத்தில் செயல்பட உதவும் கேள்விகளோடு ஒருங்கிணைந்திருக்கும். பிள்ளைகள் கேட்டவைகளையும் கற்றவைகளையும் மூலதனமாக கொண்டிருப்பதால், இது ஒரு கண்டறியும் முறையாக மாறி, அவர்களது வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துகிறது. தலைவர்கள் எழுப்பும் கேள்விகள் நினைவில் கொள்வதற்கு மாத்திரம் அல்ல, இதயத்திலும் சிந்தையிலும் மறுரூபத்தை ஏற்படுத்தி நிஜ வாழ்வில் அப்யாசப்படுத்தவும் உதவுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை உற்சாகப்படுத்துவதின் மூலம், தேவ ஆவியானவர் வெளிப்படுத்தும் காரியங்களை பின்பற்ற தலைவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது.

---

உண்மையான பாடங்களுக்கு செல்வதற்கு முன், கிட்ஸ்டோரி மற்றும் ஸ்டோரி கிளப்பின் வெவ்வேறான கூறுகளை நீங்கள் சுருக்கமாக அறிய விரும்புகிறோம். பின்வரும் 3 பக்கங்களில் இந்த வெவ்வேறான கூறுகளை விளக்குவதற்கான ஒரு அட்டவணை கொடுக்கப்படும் - அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட நோக்கம் கொண்டது. பிள்ளைகளை வேதத்தோடும், பிறரோடும், தேவனோடும் ஈடுபடுத்துவது பற்றியது.

ஓவ்வொரு வேத கதையின் திரைப்பட தொகுப்புகளும் 3 வெவ்வேறு விதங்களில் காணப்படும்:

இயேசு திரைப்பட பயன்பாடு [Jesus Film App] ஒவ்வொரு பாடத்தின் மேல் பகுதியில் உள்ள பார்கோடு-ஐ [bar code] ஸ்கேன் செய்யவும், அல்லது இணையதள இணைப்பை [Link] இன்டர்நெட் ப்ரவ்சரில் [internet browser] செலுத்தவும். CRU மற்றும் ஜீசஸ் ப்லிம் குழுவினரின் பங்களிப்பிற்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக காணப்படுகிறோம். தொடர்ந்து தேவன் எங்கள் மூலமாகவும், தேவனின் சரீரத்தின் மூலமும் செயல்பட அனுமதிக்கும் போது நாம் கேட்பதற்கும், நினைப்பதற்கும் மேலாக அவரே செயல்படுவார். அவருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக!

கிட்ஸ் அரவுன்ட் தி வர்ல்டு பற்றிய மேலும் தகவல்களுக்கு: katw.net ற்கு செல்லவும்.

கிட்ஸ்டோரி பற்றிய சிறப்பு தகவல்களுக்கு: katw.net/kidstory க்கு செல்லவும்.

CRU மற்றும் ஜீசஸ் பிளிம் பற்றிய மேலும் தகவல்களுக்கு: jesusfilm.org க்கு செல்லவும்.

வருக!! அவர் கதையைச் சொல்லி அவருடைய ஆவியின் செயல்பாட்டின் மூலம், தேவனின் மறுரூபப்படுத்தும் நம்பிக்கையை கொண்டு பிள்ளைகளிடம் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு தேவன் அநேக கதவுகளை உங்களுக்கு திறக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

# கிட்ஸ்டோரி பாட வடிவம்

**ஆரம்பம்:**

- பிள்ளைகள் தங்கள் தனிப்பட்ட கதையை பகிரக்கூடிய விதத்தில் ஒரு கேள்வியையோ செயல்பாட்டையோ தேர்ந்தெடுங்கள்.
- அந்த கேள்விக்கான பதில் பிள்ளைகளிட மிருந்து உணர்வு பூர்வமாக இருக்க வேண்டும்.
- 'ஆம்' 'இல்லை' என்பதற்கும் மேலான பதிலை தரக்கூடிய கேள்விகளை கேட்கவும்.

ஆரம்பமானது வேத கதையுடன் நேரடியாக தொடர்புடையதாக இருக்க அவசியமில்லை, ஆனால் பிள்ளைகள் அந்த திசையில் சிந்திக்க வைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

**பின்னனி:**

- பிள்ளைகளுக்கு தெரியாத வார்த்தைகள், புவியியல் இடங்கள் அல்லது கலாச்சாரத்தை தெளிவாக விளக்குங்கள்.
- இந்த நாளுக்குரிய பாடத்திற்கு முன் நடந்த முக்கிய சம்பவங்களை விவரிக்கவும்.
- தேவைப்பட்டால் முந்தின கதையின் முக்கிய கருத்துக்களை மீண்டும் எடுத்துரைக்கவும்.

கதை கூற ஆரம்பித்த பின்னர் வார்த்தைகளை விளக்குவதை தவிர்க்கவும். பின்னனியை விளக்கும் நேரத்திலேயே அவைகளை கூற உறுதிசெய்துக் கொள்ளவும்.

**கதையை கூறு:**

- 4 அல்லது 5 அத்தியாயங்களாக கதையை பிரிக்கவும்.
- பிள்ளைகளை கதையில் ஈடுபடுத்தவும்.
- கவனத்தை ஈர்த்து கதையில் ஈடுபடுத்தக் கூடிய நாடக வடிவிலான உபகரணங்களை பயன்படுத்தவும். முடிந்தால் காட்சி பொருட்களை குழுவிற்கு காண்பிக்கவும்.
- பிள்ளைகள் கதையை பிறருக்கு கூறக்கூடிய விதத்தில் சுருக்கமாக வடிவமைக்கவும்.

வேதத்தில் உள்ளபடியே கதையை கூறவும். உங்கள் சொந்த வார்த்தைகளையோ விளக்கத்தையோ பயன்படுத்தாதீர்கள். மறக்கக்கூடாத விதமாய் கூறுங்கள், ஆனால் தேவனின் வார்த்தைக்கு உண்மையாய் இருங்கள்.

**திரும்பக் கூறு:**

- கதையை வாசித்து திரும்ப கூறுவதற்கு பிள்ளைகள் வேதத்தைப் பயன்படுத்தட்டும்.
- பிள்ளைகளை ஈடுபடுத்த ஒரு விளையாட் டையோ செயல்பாட்டையோ தேர்ந் தெடுங்கள்.

பிள்ளைகள் கதையை திரும்பக் கூறும்போது அவர்கள் வேதத்தின்படி துள்ளியமாக கூறுகிறார்களா என உறுகி செய்து கொள்ளுங்கள்.

**கண்டறி & பதில் கேள்விகள்:**

- கதையில் எந்த இடத்தில் கலந்துரை யாடலை துவங்குவது என்பதைப் பற்றி ஜெபியுங்கள்.
- அறிவை பயன்படுத்தாமல் உணர்வுகளை ஈடுபடுத்தும் கேள்விகளை உபயோகிக்கவும்.

கதையில் உள்ள உண்மைகளை மாத்திரம் ஞாபகம் வைத்துக் கொள்ளும் நிலையிலிருந்து தேவன் அவர்கள் இதயத்திலும் வாழ்விலும் என்ன செய்கிறார் என்பதை நினைவில் கொள்ளும்படி முன்நேர உதவுங்கள். ஒவ்வொரு நபருடனும் ஆவியானவர் விசேஷித்த விதமாக பேச வேண்டும் என விரும்புகிறோம்.

## கிட்ஸ்டோரி பாட ஆலோசனைகள்

(மேலும் ஆலோசனைக்கு கடைசியில் உள்ள கூடுதல் சாதன பக்கங்களை பார்க்கவும்)

**கதையைக் கூறு:**

- கதைக்கேற்ற உடைகள் அல்லது பொருட்களை பயன்படுத்தவும்
- பிள்ளைகள் ஒலி எழுப்பச் செய்யவும்
  (கைகளை தடவி மழையைப்போல் ஓசை எழுப்பதல்)
- அறையை சுற்றி நகர்ந்து பலவித முக பாவனனகளை பயன்படுத்துகள்.
- கதையில் தன்னை ஒரு கதாபாத்திரத்தை போன்று பாவித்து கூறவேண்டும்

**திரும்பக் கூறு:**

- விளையாட்டு: இசை நாற்காலிகள். இருக்கையின்றி நிற்பவர் கதையின் முதல் பகுதியை கூற வேண்டும். இவ்வாறு கதை முடிவடையும் வரை விளையாடவும்.
- கலை: விளம்பர அட்டைகள் சாலையோரம் வைக்கப்படும் விளம்பர அட்டைகள் போன்றவற்றை பயன்படுத்தி கதை சொல்லவும்.
- நாடகம்: பிள்ளைகளிடம் ஏதாவது ஒரு பொருளை கொடுத்துவிட்டு, அதைக்கொண்டு எவ்வாறெல்லாம் கதை கூறுகிறார்கள் என பார்க்கவும்.
- இசை: கதையின் முக்கிய நிகழ்வுகளை கொண்டு rap வடிவில் ஒரு பாடலை இயற்றவும்.
- எழுத்து: அடுத்து என்ன? கதையில் கேட்டவற்றை கொண்டு அவர்கள் என்ன செய்ய தேவன் விரும்புகிறார் என பிள்ளைகளை எழுத வைக்கவும்.

---

**கண்டறி & பதில் கேள்விகள்:**

**தலை கேள்விகள் (உண்மைகள்)**



- கதையில் உங்கள் கவனத்தை ஈர்த்தது என்ன?
- நீங்கள் அங்கே இருப்பதுபோல் கற்பனை செய்ய முடிகிறதா?
  நீங்கள் கேட்டு/பார்த்து/முகர்ந்து/உணர்ந்தது என்ன?
- இயேசு/தேவன் அவர்களுக்கு கதையில் போதிப்பது என்ன?
- தேவன்/இயேசு இச்சூழலில்... எப்படி மறுமொழி அளித்தார்?
- தேவன்/இயேசு எப்படிப்பட்டவர் என்பதை பற்றி என்ன கற்றுக் கொண்டோம்?
- இந்த கதையில் வரும் கதாபாத்திரங்கள் ஒன்றுபோலவா அல்லது வெவ்வேறாக இருக்கிறதா?

**இதய கேள்விகள் (உணர்வுகள்)**

- இன்றைய கதையில் மிக முக்கியமான பகுதி எது என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?
- இந்த கதையை நீங்கள் கேட்டபோது எவ்வாறு உணர்ந்தீர்கள்?
- இந்த கதையில் .......... யின் இதயத்திலும் சிந்தையிலும் என்ன நடந்துக் கொண்டிருக்கும் என நினைக்கிறீர்கள்?
- தேவன்/இயேசுவைப்பற்றி எப்படி உணர்கிறீர்கள்?
- வேதாகமத்தில் தேவன் ஏன் இந்த கதையை வைத்திருக்கிறார் என நினைக்கிறீர்கள்?



**கை கேள்விகள் (செய்கைகள்)**

- இன்று நீங்கள் கேட்டவற்றில் எது உங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை கொண்டு வருகிறது?
- இந்த கதையை கேட்டபின், எப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்வீர்கள்?
- இந்த கதையை யாரிடம் இந்த வாரத்தில் பகிர்ந்துக் கொள்வீர்கள்?
- தேவன் அவருடைய கதையில் நீங்கள் எவ்விதமான பங்கு கொள்ள விரும்புகிறார் என நினைக்கிறீர்கள்?



# ஸ்டோரி கிளப்பின் மாதிரி அட்டவணை

**வரவேற்பு:**

- பிள்ளைகளை வாழ்த்தி, அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதை உணரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவும்.
- "க்ளப் டைம்" க்கு முறையான துவக்கத்தை ஏற்படுத்தவும்.
- ஜெபம்

← பிள்ளைகளை ஒன்று கூட்டி, தாங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உணர்வை உண்டாக்கி தலைவர்களிடமும் நண்பர்களிடமும் தொடர்பு கொள்ள வைக்கும் நேரம் தான் வரவேற்பு நேரம்.

**விளையாட்டு:**

- வேடிக்கை நிறைந்ததாக்கவும்.
- உறவுகள் கட்டப்படக்கூடிய விதத்தில் பிள்ளைகளும் தலைவர்களும் ஈடுபட வேண்டும்.
- அனைத்து பிள்ளைகளும் பங்குகொள்ளக் கூடிய விளையாட்டுகளை தேர்ந்தெடுக்கவும்.

← பிள்ளைகள் வேடிக்கை அனுபவித்து, அனைவரும் கலந்துகொண்டு, அவர்களது நண்பர்களையும் அழைத்து வருவதற்கு ஏற்ப பாதுகாப்பான சூழலை நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

**பெரிய குழு:**

- **கிட் கனெக்ட்:** பிள்ளைகள் தலைவர்களுடன் சிறு குழுக்களாக சேர்ந்து, அந்த வாரத்தில் கேட்ட கதையையும், கை கேள்விகளுக்கு பதில் அளித்ததின் மூலம் அவர்கள் ஏற்கனவே எடுத்த தீர்மானங்களையும் பகிர வேண்டும். சிறு குழுவிலோ அல்லது பெரிய குழுவிலோ **ஆரம்ப பகுதி** இருக்கலாம்.
- **ஆராதனை:** தேவனோடு தொடர்பு கொள்ளுதல்.
- **பின்னனி** மற்றும் **வேதாகம கதைகளை** புதுவிதமாக கூறுதல்.
- கதை சுருக்கம் மற்றும் கதையை **திரும்பக் கூறும்** பயிற்சி.

← கை கேள்விகளுக்கு அவர்கள் அளித்த பதில்கள் மற்றும் 'கிட்கனெக்ட்' நேரத்தின் போது நடந்த தனிப்பட்ட கலந்துரையாடல் மூலம் சீஷத்துவம் தொடர்ந்து நடைபெறுகிறது. பிள்ளைகள் தாங்கள் அங்கே இருப்பது போன்ற உணர்வு ஏற்படும் விதத்தில் வேதாகம கதைகள் கூறப்படுகிறது. சிறு குழுக்கள் மூலம் ஒரு குட்டி சமுதாயம் உருவாகி ஆராதனை மற்றும் அவருடைய வார்த்தையால் தேவனோடு ஒரு உறவு ஏற்படுகிறது.

**சிறு குழு:**

- ஒவ்வொரு வாரமும் வெவ்வேறான செயல்பாடுகளுடன் கதையை திரும்பக் கூறுங்கள்.
- தலை, இதய மற்றும் கை கேள்விகளை கேட்கவும்.
- ஜெபம் செய்து ஆசீர்வாதத்துடன் நிறைவு செய்யவும்.

← ஆவியானவரின் நடத்துதலோடு, தேவனின் வார்த்தையைக் கொண்டு, அன்பும் அக்கறையும் காட்டி, பிள்ளைகளை சீஷராக்கும் நேரம் இது.

**நிறைவு:**

- வேத கதையை திரும்பக் கூற முன்வாருங்கள்.
- இறுதி வார்த்தை, அறிவிப்பு, ஜெபம்.
- பெற்றோர்களுக்கு வாழ்த்து கூறுங்கள்.

← பிள்ளைகள் தன் சாட்சிகளோடும் நண்பர்களோடும் மீண்டும் வர தூண்டும் விதத்தில் கிளப்பை நிறைவு செய்யவும்.

**ஜீசஸ் ப்ளிம் ®**
**ஸ்டோரி க்ளப் பாடங்கள்**

| | |
|---|---|
| 1) இயேசுவின் பிறப்பு | லூக்கா 2:1-11, 16-18 |
| 2) இயேசுவின் குழந்தைப்பருவம் | லூக்கா 2:41-52 |
| 3) அற்புதமாக பிடிப்பட்ட மீன்கள் | லூக்கா 5:1-11 |
| 4) யவீருவின் மகள் | லூக்கா 8:40-42, 49-56 |
| 5) பாவமான பெண் மன்னிக்கப்படுதல் | லூக்கா 7:36-48 |
| 6) இயேசு புயலை அதட்டினார் | லூக்கா 8:22-25 |
| 7) இயேசு 5000 பேரை போஷித்தார் | லூக்கா 9:10-17 |
| 8) பர்த்திமேயு சுகமடைதல் | லூக்கா 18:35-43 |
| 9) இயேசுவும் சகேயுவும் | லூக்கா 19:1-10 |
| 10) விதவையின் காணிக்கை | லூக்கா 21:1-4 |
| 11) கடைசி பந்தி | லூக்கா 22:13-20, 31-34 |
| 12) இயேசு சிலுவையில் அறையப்பட்டார் | லூக்கா 23:20-26, 44-48 |
| 13) காலியான கல்லறை | லூக்கா 24:1-12 |

கூடுதல் சாதன பக்கங்கள்

# இயேசுவின் பிறப்பு

லூக்கா 2:1-11, 16-18

1) **கண்ணோட்டம்:**

உங்கள் குழுவுடன் இது உங்களது முதல் சந்திப்பு. ஒவ்வொருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, தங்களை பற்றி அவர்களுக்கு பிடித்த ஒன்றை கூற சொல்லுங்கள். அவர்களது ஆவிக்குரிய நிலையை தெரிந்துக்கொள்ள தேவனை பற்றி அவர்கள் அறிந்த ஒன்றை கூற சொல்லுங்கள்.

2) **ஆரம்பம்:**

நீங்கள் பெற்ற மிகப்பெரிய ஆச்சரியம் என்ன?

3) **பின்னனி: →**

4) **வேதாகம கதையை கூறு: →**

5) **திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**கயிறு விளையாட்டு:** 15" கயிற்றின் முனைகளை முடிச்சி போடவும். பிள்ளைகள் வட்டமாக நன்று இரு கைகளினால் கயிறை பிடிக்கவும். இசை ஒலிக்க துவங்கியதும் இடது புறமாக கயிறை நகர்த்தவும். 'நில்' என்றவுடன் அந்த முடிச்சியின் அருகில் இருப்பவர் 'போ' என்று கூறும்வரை கதையை கூற வேண்டும். கதை முடியும் வரை விளையாட்டை தொடரலாம்.

**ஜீசஸ் பிளிம்® அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/BVAJhJ

**பின்னனி:**

ஆதியிலே தேவன் ஆதாம் என்ற மனிதன் ஏவாள் என்ற பெண் உட்பட அனைத்தையும் படைத்தார். ஏதேன் என்னும் அழகிய தோட்டத்தில் அவர்களை வைத்தார். ஒரு நாள் அவர்கள் தேவனிடம் பொய் சொல்லி

கீழ்படியாமற் போனார்கள். அவர்கள் ஏதேன் தோட்டத்தில் தொடர்ந்து வாழ முடியாமல் போனது. இதனால் தேவன் அவர்களை நேசிக்கவில்லை என்று அர்த்தமில்லை. அவர்கள் மீதும் அவர்களுக்கு பின் வந்த குடும்பங்கள் மீதும் ஆச்சரியமான அன்பு கொண்டிருந்தார். ஆனால் மக்கள் தொடர்ந்து தேவனுக்கு கீழ்படியாமல் போனார்கள். அவர்கள் அவரிடம் சேருவதற்காக பல காரியங்களை முயற்சிசெய்தார்: பின்பற்ற வேண்டிய கற்பனைகள், அவர்களை ஆள ராஜாக்கள், அவர்களோடு இணைந்திருக்க தன்னுடைய விருப்பத்தை தெரிவிக்கக் கூடிய மனிதர்கள், எதுவும் வாய்க்கவில்லை. முடிவில் தேவன் தம்மிடம் இருந்த மிக விளையுயர்ந்த ஒன்றை தர முன்வந்தார். அதை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு அதை ஒரு பரிசாக கொடுத்தார். 'கிறிஸ்துமஸ் நாள்' வருகிறது.

**வேதாம கதை:**

எல்லோரும் அவர்களது எண்ணிக்கையை கணக்கிட ஜென்ம பூமிக்கு செல்ல கட்டளை போடப்பட்டது. அதனால் யோசேப்பு மரியாளை பெத்லகேமுக்கு அழைத்துச் சென்றார். சத்திரத்தில் அவர்களுக்கு இடம் இல்லாதிருந்ததால், அவர் தனது பிள்ளையை முன்னனையிலே கிடத்தினாள்.

(அடுத்த பக்கத்தில் கதை தொடரும்)

**6) கண்டறி கேள்விகள்:**

- இன்றைய வேதாகம கதையில் உனக்கு பிடித்தது என்ன?
- கதையில் உள்ள வெவ்வேறான மக்கள் யார் யார்?
- மரியாளும் மற்றவர்களும் என்ன தீர்மானத்தை எடுத்தார்கள்? அவர்கள் வேறென்ன செய்திருக்கலாம்? மக்கள் எடுத்த தீர்மானத்தினால் நடந்தது என்ன?
- தூதர்களை சந்தித்த மேய்ப்பர்களுக்கு எப்படி இருந்திருக்கும்? நீ ஒரு மேய்ப்பனாய் இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?
- இன்றைய கதையில் தேவன் ஜனங்களை சந்தித்தது போல உனக்கு நடந்திருந்தால், நீ என்ன பதில் கொடுத்திருப்பாய்?
- இன்றைக்கு தேவனிடமிருந்து என்ன நற்செய்தி கேட்க விரும்புகிறாய்? தேவனை பற்றி என்ன நல்ல செய்தியை மற்றவரிடம் பகிர்ந்துக் கொள்வீர்கள்?
- இன்றைய கதையில் எது முக்கியமான பகுதி என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- தேவனை பற்றி நான் அறிந்துக்கொண்டது என்னவென்றால் ……………………

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்று கேட்ட வேத கதையில் உள்ள மரியாள், யோசேப்பு மற்றும் மேய்ப்பர்கள் போல நீயும் ஒரு பங்கு வகிக்க தேவன் விரும்புகிறார். தேவன் இந்த கதையில் நீ எப்படி பங்கு பெற வேண்டும் என்று நினைக்கிறார்?
- இந்த வாரத்தில் யாரிடம் இந்த கதையை பகிர்ந்துக் கொள்ளப் போகிறாய்?

**வேதாகம கதை (-தொடர்ச்சி)**

அன்று இரவு மேய்ப்பர்கள் வெளியில் மந்தையை காத்துக்கொண்டிருந்தனர். தேவ தூதன் அவர்களுக்கு முன்பாக தோன்றினதால் அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன், “பயப்படாதிருங்கள். எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை தரக்கூடிய நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்க வந்தேன். இன்றைக்கு உங்கள் இரட்சகர் பிறந்திருக்கிறார். அவர் கர்த்தராகிய கிறிஸ்து”. மேய்ப்பர்கள் மரியாள், யோசேப்பு மற்றும் குழந்தையை காண விரைந்தனர். அவர்களை கண்டபோது தேவதூதன் சொன்ன எல்லாவற்றையும் கூறினார்கள். அனைவரும் ஆச்சரியப்பட்டனர். மேய்பர்கள் தாங்கள் கண்ட, கேட்ட அனைத்திற்காகவும் தேவனை ஸ்தோத்தரித்து தங்கள் மந்தையிடம் சென்றனர்.

**8) நிறைவு ஆசீர்வாதம்**

இயேசுவே, நாங்கள் உமக்கு செவிக்கொடுத்து கீழ்படிய விரும்புகிறீர் என்பதை நாங்கள் அறிகிறோம். உம்மையும் மற்றவர்களையும் ஈர்ப்பதற்காக அல்ல ஆனால் உம்மை நம்பி கீழ்படிய ஒவ்வொரு பிள்ளையையும் ஆசீர்வதியும் 1இராஜாக்கள் 15:22யை படியுங்கள்.

KIDStory

# இயேசுவின் பிள்ளை பருவம்

லூக்கா 2:41-52

1) **கண்ணோட்டம்:**

கடந்த வாரம் இயேசுவின் பிறப்பைப் பற்றி பேச துவங்கினோம். அந்த கதை எதைப் பற்றியது என்று யாருக்காவது ஞாபகம் இருக்கிறதா? இந்த வாரத்தில் எப்போதாவது தேவன் உங்களை ஏதாவது செய்ய தூண்டினாரா? நீங்கள் அதைப் பற்றி என்ன செய்தீர்கள்? நீங்கள் யாரிடம் இந்த கதையை பகிர்ந்தீர்கள்?

2) **ஆரம்பம்:**

நீங்கள் வேடிக்கைக்காக மேற்கொண்ட பயணம் எது?

3) **பின்னனி:**

4) **வேதாகம கதையை கூறு:**

5) **திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**டிங்கோ டிங்கோ டேங்கோ:** பிள்ளைகளை ஒரு வட்டமாக அமைக்கவும். “டிங்கோ டிங்கோ டேங்கோ” என்று கூறிக்கொண்டே ஏதேனும் ஒரு பொருளை கைமாற்ற வைக்கவும். “டேங்கோ” என்று கூறும் போது யாரிடம் பொருள் இருக்கிறதோ அவர்கள் கதையின் அடுத்த பகுதியை கூறவேண்டும். அடுத்து யார் “டேங்கோ” கூறுவார் என்று அறியாதவாறு சொற்களின் இடையே உள்ள நேரத்தை மாற்றி அமைக்கவும்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/LzKcn8

**பின்னனி:**

இயேசு பெத்லெகேமிலே பிறந்திருந்தாலும், அவருடைய குடும்பம் நாசரேத்துவிற்கு குடிபெயர்ந்தது. உங்களைப் போன்றே அவரும் ஒரு சிறு பிள்ளையாக இருந்து வளர்ந்தார். (அவர்கள் எப்படி வளர்ந்திருப்பார்கள் என்று நீங்கள் கேட்கலாம்) வசனம் 2:40 கூறுகிறது இயேசு ஆரோக்கியமாக வளர்ந்து மிகுந்த ஞானம் உடையவராய் இருந்தார். ஒவ்வொரு வருடமும் அவரது குடும்பம் “பஸ்கா” என்னும் பண்டிகையை கொண்டாட எருசலேமுக்கு போவார்கள். பல ஆண்டுகளுக்கு முன் தேவன் அவர்கள் குடும்பங் களை எப்படி வல்லமையாய் காப்பாற்றினார் என்பதை நினைவு கூறவே அப்படி செய்தனர். குறைந்தது ஒரு வாரமாவது அங்கே தங்கியிருந்து பின்னர் நாசரேத்துக்கு திரும்புவார்கள். இந்த குறிப் பிட்ட வருடத்தில் என்ன நடந்தது என்று பார்ப்போம்.

**வேதாகம கதை:**

“பஸ்கா பண்டிகை” க்காக ஒவ்வொரு ஆண்டும் இயேசுவின் பெற்றோர் எருசலேமுக்கு போவார்கள். இயேசு பன்னிரெண்டு வயதாக இருக்கும்போது வழக்கம் போல அவர்கள் சென்று, பின்னர் வீடு திரும்பினர். பிள்ளையாகிய இயேசு எருசலேமிலேயே தங்கினது அவரது பெற்றோருக்கு தெரியாது. கூட்டத்தல் எங்கேயோ இயேசு இருக்கிறார் என்று நினைத்து ஒரு நாள் முழுதும் பிரயாணம் பன்னினார்கள். பின்னர் அவர்களது நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் இயேசுவை தேடினர். அவரை அங்கு காணாததால் அவரைத் தேடி மீண்டும் எருசலேமுக்கு சென்றனர். மூன்று நாட்களுக்கு பின்னர் அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன பதில்களையும் குறித்து பிரமித்தார்கள்.

இயேசுவின் பெற்றோர் அவரை பார்த்தபோது ஆச்சரியப்பட்டார்கள். அவருடைய தாய் அவரிடம், “மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? உன்

தகப்பனும் நானும் மிகுந்த வருத்தத்தோடே உன்னைத் தேடினோமே'' என்றாள்.

இயேசு அதற்கு, ''நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவின் வீட்டில் நான் இருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா?'' என்றார். அவர் சொன்னதின் அர்த்தம் அவர்களுக்கு புரியவில்லை.

இயேசு அவர்களோடு நாசரேத்துக்கு சென்று அவர்களுக்கு கீழ்படிந்திருந்தார். ஆனால், அவரது தாய் நடந்தவற்றை அவளது மனதில் வைத்திருந்தாள். இயேசு ஞானத்திலும் வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் வளர்ந்தார்.

**6) கண்டறிய கேள்விகள்:**

- கதையில் எது உங்களுக்கு முக்கிய பகுதியாக தோன்றுகிறது?
- வேதாகம கதையின் எந்தப் பகுதி உங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது?
- மக்கள் எப்படிப்பட்ட தீர்மானங்களை எடுத்தார்கள்? அவர்கள் வேறென்ன செய்திருக்கலாம்? அவர்கள் எடுத்த தீர்மானத்தின் விளைவு என்ன?
- இயேசு ஞானத்திலும் பலத்திலும் வளர்ந்தார் என்று வேதாகம கதை கூறுகிறது. அவர் தேவனாலும் மனிதர்களாலும் நேசிக்கப்பட்டார். நீங்கள் எவ்வாறு இயேசுவை போல வளர்கிறீர்கள்? இதில் எந்த பகுதியில் தேவன் பிரியப்படுவார்? நீங்கள் எதில் வளர விரும்புகிறீர்கள்.
- தேவனோடு இருக்க நீங்கள் எவ்விதத்தில் முயற்சிக்கிறீர்கள்?
- இந்த வேதாகம கதையானது, தேவன் ………………… செய்யும் போது பிரியப்படுகிறார் என்று கூறுகிறது.

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்றைய கதையில் இயேசுவைப் போல நீங்களும் அவரது கதையில் ஒரு பங்கு பெற தேவன் விரும்புகிறார். நீங்கள் அவரது கதையில் எப்படிப்பட்ட பங்கு பெற தேவன் விரும்புகிறார்?
- இந்த வாரத்தில் யாரிடம் இக்கதையை கூறப் போகிறீர்கள்?

**8) நிறைவு ஆசிர்வாதம்:**

வாலிப பிள்ளையாக எப்படி வளர்வது பற்றிய இயேசுவின் முன் உதாரணத்திற்காக, ஆண்டவரே உமக்கு நன்றி. இப்பிள்ளைகள் ஞானத்திலும், வளர்த்திலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் வளர உதவும். பிதாவின் வீட்டிலே உம்மோடு கூட இந்த பிள்ளைகள் இருக்கும்படி இவர்களை ஆசிர்வதியும். (லூக்கா 2:49 யை படியுங்கள்)

KIDStory

# அற்புதமாக பிடிப்பட்ட மீன்கள்

லூக்கா 5:1-11

**1) கண்ணோட்டம்:**

- முன் கூறப்பட்ட கதைகளை சொல்ல பிள்ளைகள் முன் வருகிறார்களா என்று பார்க்கவும்.
- முன் கூறப்பட்ட கதைகளை யார் மற்றவர்களிடம் திரும்பக் கூறினீர்கள்? அப்பொழுது என்ன நடந்தது என்று அவர்களை கூறச் சொல்லவும்.
- கடந்த வாரங்களில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு எப்படி பதில் அளித்தீர்கள்.

**2) ஆரம்பம்:**
நீங்கள் விரும்பம் இல்லாமல் கீழ்படிந்த அனுபவம் பற்றிப் பகிருங்கள்.

**3) பின்னனி:**

**4) வேதாகம கதையைக் கூறு:**

**5) திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**இசை நாற்காலி:**
குழுவில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையில் ஒன்று குறைய அனைத்து நாற்காலிகளையும் வட்டமாக அடுக்கவும். நாற்காலிகள் வெளிப்புறமாக நோக்கி இருக்க வேண்டும். இசை ஒலிக்கும் போது பிள்ளைகள் கடிகார திசையில் நாற்காலிகளைச் சுற்றி வர வேண்டும். இசையை அமர்த்தியவுடன் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இருக்கையில் அமர வேண்டும். நாற்காலி இல்லாமல் நிற்பவர் கதையின் அடுத்த பகுதியை கூற வேண்டும். கதையை முழுமையாக கூறும் வரை விளையாடவும்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/5n8yNK

**பின்னனி:**

தேசமெங்கும் இயேசு அற்புதங்கள் பல நிகழ்த்தினார். வியாதிப்பட்ட அநேகரை குணப்படுத்தினார். பிசாசுகள் அவருக்கு கீழ்படிந்தன. ஜனங்கள் அவர் பிரசங்கத்தைக் கேட்க அவரை பின் தொடர்ந்தனர். அக்கூட்டம் தொடர்ந்து பெருகிக் கொண்டே போவதை அடுத்த கதையில் பார்ப்போம்.

**வேதாகம கதை:**
ஒரு நாள் இயேசு கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது, அருகே ஜனங்கள் தேவ வசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள். கடற்கரையிலே நின்ற இரண்டு படகுகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்கள் அவர்களை விட்டிறங்கி, வலைகளைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்த படகுகளில் ஒன்றில் ஏறினார். அது சீமோனுடைதாயிருந்தது. அதை கரையிலிருந்து சற்று தள்ளும்படி அவனை கேட்டார். அதன் பின் இயேசு படகில் உட்கார்ந்து ஜனங்களுக்கு போதித்தார்.

அவர் போதகம் பண்ணி முடித்தபின் சீமோனை நோக்கி, “ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன் பிடிக்கும்படி வலைகளைப் போடுங்கள்”, என்றார். சீமோன் பேதுரு, “ஐயா, இரவு முழுவதும் நாங்கள் முயற்சி செய்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனாலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்” என்றான். இயேசு சொன்னது போல அந்த மீன்பிடிப்பவர்கள் செய்தபோது, தங்கள் வலை கிழிந்துப் போகக் கூடிய அளவிற்கு அதிகமான மீன்களைப் பிடித்தார்கள். மற்ற படகுகளில் இருந்த தங்கள் நண்பர்களை உதவும்படி அழைத்தார்கள். அவர்கள் வந்து இரண்டு படகுகள் மூழ்கும் அளவிற்கு நிரப்பினார்கள்.

(கதை அடுத்தப் பக்கத்தில் தொடரும்)

**6) கண்டறிய கேள்விகள்:**

- இந்த கதையில் உனக்கு பிடித்தது என்ன?
- கதை முழுவதும் சீமோன் பேதுருவின் உணர்வுகள் எப்படி இருந்திருக்கும்? கதையின் ஒவ்வொரு காட்சியையும் குறித்து கலந்துரையாடி பேதுருவின் நிலையை அறியுங்கள்.
- இயேசுவின் அருகே நான் இருக்கக்கூடாது என அவன் நினைத்ததைக் குறித்து ஆச்சிரியப்படுகிறேன். பயப்படாதே என்று இயேசு ஏன் கூறியிருப்பார் என்று நினைக்கிறீர்கள்?
- இயேசு உங்கள் அருகில் இருக்க வேண்டாம் என்று நினைக்கக்கூடிய அளவிற்கு உங்களை இயேசுவிடமிருந்து தள்ளியிருக்கச் செய்யும் காரியம் ஏதாவது உங்களிடம் உண்டென்று நீனைக்கிறீர்களா? அதை குறித்து இயேசு எப்படி நினைப்பார் என்று எண்ணுகிறீர்கள்?
- இயேசு, சிமோன் பேதுருவுக்கு என்ன சவால் இட்டார்? இப்பொழுது தேவன் உங்களுக்கு என்ன சவால் கொடுக்கிறார்?
- இயேசுவுக்கு எது முக்கியம் என நீங்கள் நினைக்கிறீர்கள்?
- பேதுருவும் யாக்கோபும் யோவானும் எல்லாவற்றையும் விட்டு இயேசுவை பின்பற்றினர். நீங்கள் இயேசுவை பின்பற்ற வேண்டுமானால் எதை விடுவது உங்களுக்கு கடினமாக இருக்கும்? நீங்கள் எப்படி இயேசுவை பின்பற்றுகிறீர்கள்?
- இயேசுவைப் பற்றி இந்த கதை என்ன சொல்கிறது?

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்று கற்றுக்கொண்டதிலிருந்து நீங்கள் என்ன செய்ய வேண்டுமென பரிசுத்த ஆவியானவர் நினைக்கிறார் என எண்ணுகிறீர்கள்?
- இந்த வாரம் யாரிடம் இந்த கதையை பகிர்ந்துக்கொள்ள போகிறீர்கள்?

**வேதாகம கதை: (தொடர்ச்சி)**

சீமோன் பேதுரு அதை கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து “ஆண்டவரே நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப் போக வேண்டும்” என்றான். அவர்கள் மிகுந்த மீன்களைப் பிடித்ததினிமித்தம், அவனுக்கும் அவனோடு கூட இருந்த யாவருக்கும் பிரமிப்பு உண்டாயிற்று. யாக்கோபும் யோவானும் சீமோன் பேதுருவும் அந்தப்படியே பிரமித்தார்கள்.

இயேசு சீமோனை நோக்கி, “பயப்படாதே இதுமுதல் நீ மனுஷனை பிடிக்கிறவனாய் இருப்பாய்” என்றார். அவர்கள் படகுகளை கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றனர்.

**8) நிறைவு ஆசீர்வாதம்:**

இயேசுவே இன்றைய கதையில் உள்ள மனிதர்கள் போலவே இந்த பிள்ளைகளும் மிகுந்த ஆசையுடன் உமக்கு கீழ்படிந்து பின்பற்ற ஆசீர்வதியும்.

# யவீருவின் மகள்

லூக்கா 8:40-42; 49-56

**1) கண்ணோட்டம்:**

- அற்புதமாய் பிடிப்பட்ட மீன்களின் கதையை யாராவது சொல்கிறார்களா என்று பாருங்கள்.
- தேவன் எதிர்ப்பார்த்தவைகளுக்கு அவர்கள் எப்படி கீழ்படிந்தார்கள்?

**2) ஆரம்பம்:**

நீங்கள் மிகவும் சுகவீனமாய் இருந்த நேரத்தை பற்றிக் கூறுங்கள்.

**3) பின்னனி:**

**4) வேதாகம கதையைக் கூறு:**

**5) திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:**

கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

நடித்துக் காட்டு: ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் கதாபாத்திரத்தை ஒதுக்கவும். கதையை நடித்துக்காட்டும் முன் பயிற்சி செய்ய வேண்டும். ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள் கதையை சொல்லும் போது மற்ற பிள்ளைகள் நடித்துக் காட்டட்டும்.

ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://googl/BZr4bq

**பின்னனி:**

இயேசு பல அற்புதங்களை செய்தார்; அநேக வியாதிபட்டவர்கள் சுகமாகினார்கள். பிசாசுகள் ஜனங்களை விட்டு ஓடின. ஆனால் அநேக மதத் தலைவர்கள் இயேசு தேவனிடத்தில் இருந்து வந்தவர் என இன்னும் நம்பவில்லை. இயேசுவிடம் ஒரு கோரிக்கையுடன் வந்த அப்படிப்பட்ட தலைவர்களில் ஒருவரை தான் இன்று நாம் சந்திக்க போகிறோம். அவர் ஜெபஆலயத்தில் வேலை செய்கிறவர். நாம் சபை என்று அழைப்பதுபோல, யூதர்கள் தேவனை தொழுதுக்கொள்ளும் இடம் தான் அது.

**வேதாகம கதை:**

இயேசு திரும்பி வந்தபோது ஜனங்கள் எல்லோரும் அவருக்காக காத்திருந்தபடியால் அவரை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டனர்.

அப்பொழுது ஜெப ஆலய தலைவனாகிய யவீரு என்னும் ஒருவன் வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, ‘‘என் பன்னிரெண்டு வயதுள்ள ஒரே குமாரத்தி மரண அவதிப்படுகிறபடியால் என் வீட்டிற்கு வரும்படி உம்மை வேண்டிக் கொள்கிறேன்’’, என்றான்.

அவர் போகையில்... ஒருவன் அவன் வீட்டிலிருந்து வந்து, அவனை நோக்கி, உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம்’’, என்றான். இயேசு அதை கேட்டு, ‘‘பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள்’’ என்றார்.

(கதை அடுத்தப் பக்கத்தில் தொடரும்)

**6) கண்டறி கேள்விகள்:**

- இன்றைய வேத கதையில் உனக்கு பிடித்தது என்ன?
- இன்றைய கதையில் இருந்த வெவ்வேறான மக்கள் யார் யார்?
- கதையில் நீங்கள் இருப்பது போன்று கற்பனை செய்யும் போது, நீங்கள் கண்டதும் கேட்டதும் என்ன?
- யவீரு எடுத்த தீர்மானங்கள் என்ன? இயேசு எடுத்த தீர்மானம் எப்படிப்பட்டது? அவர்கள் வேறேன்ன செய்திருக்கலாம்?
- யவீருவின் மகள் உயிருடன் வந்தபோது அனைவரின் உணர்வுகள் என்னவாக இருந்திருக்கும்?
- உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் தேவன் செய்த அற்புதத்தைப் பற்றி கூறமுடியுமா?
- இயேசு பேசினபோது யவீருவின் மகள் உயிர் பெற்றாள். நீங்கள் இருக்கும் கடினமான சூழ்நிலையில் இயேசு என்ன பேச வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?
- இன்று இயேசு ………… எனக் கற்றுக் கொண்டேன்.

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- தேவன் (பரிசுத்த ஆவியானவர்) இந்த கதை மூலமாக என்னிடம் என்ன கூறுகிறார் என்றால்………………………
- இன்றைய வேதாகம கதையில் உள்ள யவீரு போல நீங்களும் இக்கதையில் பங்குகொள்ள வேண்டும் என இயேசு விரும்புகிறார். இந்த கதையில் நீங்கள் எப்படி பங்குபெற வேண்டும் என்று தேவன் நினைக்கிறார் என எண்ணுகிறீர்கள்?
- இந்த வாரத்தில் யாரிடம் இந்த கதையை பகிர பேகிறீர்கள்?

**வேதாகம கதை (தொடர்ச்சி)**

இயேசு அந்த வீட்டில் வந்தபோது பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணின் தகப்பனையும் தாயையும் தவிர வேறொவரையும் உள்ளே வரவிடவில்லை.

எல்லோரும் அழுது அவளுக்காக துக்கமாக இருந்தார்கள். ஆனால் இயேசு, “ஆழாதேயுங்கள் அவள் மரித்துப் போகவில்லை, தூங்கிக்கொண்டிருக்கிறாள்” என்றார்.

அவள் மரித்தது அனைவருக்கும் தெரிந்ததால் அவரை பார்த்து சிரித்தார்கள். ஆனால் இயேசு அவள் கையை பிடித்து, “பிள்ளையே எழுந்திரு” என்றார். அப்பொழுது அவளுக்கு உயிர் திரும்ப வந்தது, அவள் உடனே எழுந்திருந்தாள்.

அவளுக்கு ஆகாரம் கொடுக்க கட்டளையிட்டார். நடந்ததை யாரிடமும் சொல்லாமல் இருக்கும்படி அவளுக்கு கட்டளையிட்டார்.

8) நிறைவு ஆசீர்வாதம்: கர்த்தாவே, இயேசுவில் இருக்கும் பரிபூரண ஜுவனுக்காக நன்றி. ஒவ்வொரு பிள்ளையையும் உமது ஆனந்தத்தினாலும் சந்தோஷத்தினாலும், முழுமையான ஜீவனாலும் ஆசீர்வதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீர் எங்களுக்கு அளிக்கும் சகல நன்மைகளையும் பிசாசானவன் திருட கூடாமற்போவதாக. யோவான் 10:10 படிக்கவும்.

# பாவமான ஸ்திரி மன்னிக்கப்படுதல்

லூக்கா 7:36-48

1) **கண்ணோட்டம்:** இந்த தொடரில் அநேக கதைகளை சொல்லியிருக்கிறோம். உங்கள் குழுவில் பிடித்தமான கதை எது என்று கண்டறிந்து அதை திரும்பக் கூற முயற்சிக்கவும்.

2) **ஆரம்பம்:** பிறருக்கு எவ்விதத்தில் மரியாதை கொடுத்திருக்கிறீர்கள்?

3) **பின்னனி:** →

4) **வேதாகம கதையைக் கூறு:** →

5) **திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**பேன்டோமைம்:** சிறு சிறு குழுக்களாக பிரித்துக் கொள்ளவும். ஒரு குழு வார்த்தைகள் உபயோகிக்காமல் கதையின் முதல் பகுதியை நடித்துக் காட்ட வேண்டும். மற்றோரு குழு என்ன நடித்துக் காட்டினார்கள் என்று கூறவேண்டும். அடுத்த குழு கதையின் இரண்டாவது பகுதியை நடித்துக்காட்ட வேண்டும். மீதியான குழுக்கள் என்ன நடித்துக் காட்டினார்கள் என்று கூறவேண்டும்.

கதை முழுவதும் கூறும்வரை நடித்துக்காட்டவும். நடித்துக் காட்டும் குழு அடுத்த பகுதியை மறந்துவிட்டால் அவர்களுக்கு உதவலாம்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/brPZQF

**பின்னனி:** இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் வீட்டிற்கு வருபவரை மிகுந்த மரியாதையுடன் நடத்த வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

அவர்களை வாழ்த்தி அவர்களது அழுக்கு படிந்த கால்கள் உங்கள் வீட்டிற்குள் நுழைவதற்கு முன் கழுவப்பட்டதை உறுதி செய்ய வேண்டும். இவற்றை செய்ய தவறினால் அது மிக அவமரியாதையாக இருக்கும்.

அறியவேண்டிய வேறு சில காரியங்கள்: தீர்க்கதரிசியானவன் தேவன் சொல்வதைக் கேட்டு தேவனுக்காக பேசுகிறவன். பாவத்தை மன்னிக்கக் கூடிய ஒருவர் தேவன் மட்டுமே.

**வேதாகம கதை:**
ஒரு மதத்தலைவன் தன்னுடனே சாப்பிட வேண்டும் என்று அவரை கேட்டுக் கொண்டான். இயேசு அந்த பரிசேயனுடைய வீட்டிற்குள் நுழைந்து பந்தியில் அமர்ந்தார். அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்தாள். அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டிருந்தாள்.

அவருடைய பாதங்களை தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலை முடியால் துடைத்து அவருடைய பாதங்களை முத்தம் செய்து பரிமளதைலத்தைப் பூசினாள். பரிசேயன் அதை கண்டபோது, “இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மை தொடுகிற ஸ்திரீ இப்படிப்பட்டவள் என்று அறிந்திருப்பார்; இவள் பாவியாய் இருக்கிறாள்” என்று எண்ணினான்.

(கதை அடுத்த பக்கத்தில் தொடரும்)

6) **கண்டறி கேள்விகள்:**

- கதை சொல்லும் போது நீங்கள் எதை குறித்து ஆச்சரியப்பட்டீர்கள்?
- கதையின் எந்த பகுதி உனக்கு பிடித்திருந்தது?
- கதையில் அந்த பெண்ணின் பெயர் ஏன் குறிப்பிடப்படவில்லை என்று ஆச்சரியப்படுகிறேன்.
- அந்த ஸ்திரீ அதிகமான பாவம் செய்ததால் தான் இயேசு அவளை பார்த்து நீ மன்னிக்கப்பட்டாய் என்று கூறினார் என்று நினைக்கிறேன்.
- இயேசு என்னை இந்த காரியத்திற்காக மன்னிக்க வேண்டும் ……………
- இயேசு என்னை ஏன் மன்னிக்க வேண்டும் என்று யோசித்து பார்க்கிறேன். (இந்த நேரத்தில் அவர்கள் சமுதாயத்திற்கு ஏற்றார் போல கிறிஸ்துவை பின்பற்றுபவராக மாறுவது எப்படி என்பதைப் பற்றி விவரிக்கலாம்)
- தேவனை பற்றி நான் இதை அறிந்துக்கொண்டேன் ………………. நீங்கள் அவரை நேசிப்பதிலும் அவருக்காக வாழ்வதிலும் எப்படிப்பட்ட மாற்றத்தை இது ஏற்படுத்தும்?

7) **தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்றைய வேதாகம கதையில் உள்ள ஸ்திரீயைப்போல நீங்களும் ஒரு பங்கு வகிக்க தேவன் விரும்புகிறார். இந்த கதையில் நீங்கள் எப்படி பங்கு பெற வேண்டும் என்று தேவன் நினைக்கிறார்?
- இந்த வாரத்தில் யாரிடம் இக்கதையை கூறுவீர்கள்?

**வேதாகம கதை (தொடர்ச்சி)**

இயேசு அவனிடம், "உனக்கு நான் ஒரு கதை சொல்ல வேண்டும்" என்றார். அதற்கு அவன், "போதகரே சொல்லும்" என்றான். இயேசு, "ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள். ஒருவன் ஐந்நூறு வெள்ளிகாசும், மற்றவன் ஐம்பது வெள்ளிகாசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு பணம் இல்லாததால் இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இவர்களில் யார் அவனிடத்தில் அதிக அன்பாய் இருப்பான்?"

மதத்தலைவன், "எவனுக்கு அதிகமாக மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன்".

அதற்கு இயேசு, "சரியாய் சொன்னாய்" என்று சொல்லி ஸ்திரீயினிடம் திரும்பி அந்த மனிதனிடம், இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே, நான் உன் வீட்டிற்குள் பரவேசித்தேன், நீ என் கால்களுக்கு தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் முடியினால் அவைகளை துடைத்தாள். நீ என்னை முத்தம் செய்யவில்லை, இவளோ நான் உட்பிரவேசித்தது முதல் என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்.

நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்கு சொல்லுகிறேன்; அவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது, இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே. எவனுக்கு கொஞ்சம் மன்னிக்கப்பட்டதோ அவன் கொஞ்சமாய் அன்புக்கூறுவான்" என்றார்.

அவளை நோக்கி, "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது", என்றார்.

8) **நிறைவு ஆசீர்வாதம்:**

கர்த்தாவே, நீர் எங்களை மன்னித்தது போல இந்த பிள்ளைகளுக்கும் அன்புள்ள இதயமும் மன்னிக்கும் இதயமும் தந்து ஆசீர்வதியும். மற்றவர்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் தந்து இவர்களை ஆசீர்வதியும். கொலோசியர் 3:13,14 படிக்கவும்

# இயேசு புயலை அதட்டினார்

லூக்கா 8:22-25

1) **கண்ணோட்டம்:**

- இதற்கு முன் கூறப்பட்ட கதைகளை எந்த பிள்ளையாவது கூற விரும்புகிறதா எனப் பார்க்கவும்.
- யாரெல்லாம் மற்றவர்களிடம் இந்த கதைகளை கூறினீர்கள்? அப்பொழுது நடந்தவற்றைப் பற்றி கூறுங்கள்.
- கடந்த வாரங்களில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு எப்படி பதிலளித்தீர்கள்?

2) **ஆரம்பம்:** ஒரு பெரிய புயலைப் பற்றி உங்களது அனுபவத்தைக் கூறுங்கள்.

3) **பின்னனி:** →

4) **வேதாகம கதையைக் கூறு:** →

5) **திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**கதை புத்தகங்கள்:** கதை புத்தகத்தில் உள்ள படங்கள் அல்லது வார்த்தைகளைக் கொண்டு பிள்ளைகள் அக்கதையை திரும்பக் கூற வேண்டும். பிள்ளைகள் தாங்களாகவே எப்படி ஒன்றை தயாரிப்பது பற்றி கூடுதல் சாதன பக்கத்தைப் பார்க்கவும்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/G8raUU

**பின்னனி:** ஜனங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு கருத்தை இயேசு கதையாக கூறினார். இது உவமை என அழைக்கப்படும். விசுவாசத்தைப் பற்றியும் தேவனை சார்ந்திருத்தல் பற்றியும் இயேசு சற்றுமுன் சில உவமைகளை கூறி இருந்தார். அதன்பின் தன் சீடர்களுக்கு அவற்றை விவரித்தார். அன்று இரவு, இயேசு தன் மனிதர்களை ஒரு படகில் ஏற்றி அக்கரைக்கு அனுப்பினார்.

**வேதாகம கதை:** ஒரு நாள் இயேசு தமது சீஷர்களோடு கூட படகில் ஏறி, "கடலின் அக்கரைக்குப் போவோம் வாருங்கள்" என்றார். அப்படியே புறப்பட்டு போனார்கள். அவர்கள் போகும்போது இயேசு தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது கடலில் சுழற்காற்று உண்டானதால் சூழ்நிலை மோசமாகும்படி படகு தண்ணீரால் நிறைந்தது.

அவருடன் இருந்தவர்கள் அவரிடம் வந்து, "ஐயரே, ஐயரே மூழ்கிபோகிறோம்" என்று அவரை எழுப்பினார்கள். அவர் எழுந்து காற்றையும் அதின் அலைகளையும் அதட்டினார். உடனே அவைகள் நின்றுபோய் அமைதல் உண்டானது. இயேசு அவர்களை நோக்கி, "உங்கள் விசுவாசம் எங்கே?" என்றார்.

அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு, "இவர் யாரோ, காற்றுக்கும் தண்ணீருக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்கு கீழ்படிகிறதே என்றும் ஆச்சரியப்பட்டு ஒருவரோடு ஒருவர் சொல்லிக்கொண்டனர்.

6) **கண்டறிய கேள்விகள்:**

- கதையின் எந்த பகுதி மிகச்சிறந்தது என நினைக்கிறீர்கள்?
- கதையைக் கூறும் போது நீங்கள் அதை எப்படி கற்பனை செய்து பார்த்தீர்கள்?
- ஒரு வேளை நீங்கள் அந்த படகில் இருந்திருந்தால் நீங்கள் எப்படி செயல்பட்டிருப்பீர்கள்?
- இயேசுவை எழுப்புவதற்கு முன் எவ்வளவு நேரம் காத்திருந்திருப்பீர்கள்?
- உங்கள் வாழ்க்கையில் "இயேசுவை எழுப்பி" அவர் உதவி தேவைப்படும் அளவிற்கு ஏதேனும் காரியங்கள் உண்டா?
- எது உங்களை உண்மையில் பயப்பட வைக்கிறது?
- இயேசு இப்பொழுது என்னுடன் இருந்தால், அவர் என்ன சொல்ல விரும்புவார்?
- என் வாழ்க்கையில் உள்ள புயல்களை இயேசு எப்படி தீர்ப்பார்?

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்று நீங்கள் கற்றுக்கொண்டதை வைத்து, பரிசுத்த ஆவியானவர் நீங்கள் என்ன செய்ய விரும்புகிறார் என நினைக்கிறீர்கள்?
- இந்த கதையை யாரிடம் இந்த வாரம் கூற போகிறீர்கள்?

**வேதாகம கதை (தொடர்ச்சி)**

**8) நிறைவு ஆசீர்வாதம்:**

இயேசுவே, எந்த நேரத்திலும், பிரச்சனையோடும், கேள்விகளோடும் நாங்கள் உம்மிடத்தில் வர முடிகிறது. அதற்காக உமக்கு நன்றி.

KIDStory

# இயேசு 5000 பேரை போஷித்தார்

லூக்கா 9:10-17

**1) கண்ணோட்டம்:** முன்பு கூறின கதைகளை பிள்ளைகள் சரியாக வரிசை படுத்துகிறார்களா என்று பார்க்கவும். எந்த கதை அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது? ஏன்?

**2) ஆரம்பம்:** யாருக்காவது மதிய உணவு அல்லது பணம் கொடுத்து உதவுவீர்களா? ஏன்?

**3) பின்னனி:→**

**4) வேதாகம கதையை கூறு:→**

**5) திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**கை செய்கைகள்:** கதையின் ஒவ்வொரு பகுதியை பிள்ளைகள் கூறுவதற்கு ஒரு செய்கையை கண்டுபிடிக்கட்டும். பின்பு பிள்ளைகள் ஒரு நபரை ஜோடியை தெரிந்துக்கொண்டு கை செய்கை மூலம் கதையை அந்த நபரிடம் கூற வேண்டும்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/6Mih4b

**பின்னனி:** இயேசு ஜனங்களுக்கு போதித்து பல அற்புதங்களைச் செய்தார். பிசாசுகளை துரத்தி ஜனங்களை சுகமாக்கினார். ஜனங்கள் இயேசுவின் போதனைகளை விரும்பினார்கள். அவர் அப்பொழுது தமது சீடர்களுடன் இருக்கும்படி தனியே செல்ல விரும்பினார் …. அவரை பின்பற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்கள். அவர் எங்கே செல்கிறார் என அறிய மக்கள் கூட்டம் முயன்றது.

**வேதாகம கதை:** இயேசு தமது அப்போஸ்தலர்களை கூட்டிக்கொண்டு தனியாக இருக்கும்படி போனார். ஜனங்கள் அதை அறிந்து அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

அவர்களை அவர் ஏற்றுக்கொண்டு தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து அவர்களுடனே பேசிச் சுகம் வேண்டும் என்று வந்தவர்களை சுகப்படுத்தினார்.

சாயங்காலமாகிறபோது பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் இயேசுவிடம் வந்து, ‘‘சுற்றி இருக்கிற ஊர்களிலும் கிராமங்களிலும் ஜனங்கள் போய் தங்கி உணவுப் பாதார்த்தங்களைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களை அனுப்பும்’’ என்றனர். இயேசு அவர்களைக் நோக்கி, ‘‘நீங்களே அவர்களுக்கு உணவுக் கொடுங்கள்’’ என்றார்.

(அடுத்தப் பக்கத்தில் கதை தொடரும்)

**6) கண்டறிய கேள்விகள்:**

- இந்த கதையில் உங்களுக்கு பிடித்தது என்ன?
- இந்த கதையில் உள்ள வெவ்வேறான மக்கள் யார்? மக்கள் எப்படிப்பட்ட தீர்மானங்களை எடுத்தார்கள்? அவர்கள் வேறென்ன செய்திருக்கலாம்? அவர்கள் எடுத்த தீர்மானத்தின் விளைவு என்ன?
- இந்த கதையில் ஒருவராக நீங்கள் இருக்க நேரிட்டால் யாரை போல இருந்திருப்பீர்கள்? என்ன உணர்வுகள் உடையவராக இருந்திருப்பீர்கள்?
- உங்களை பிலிப்புவாக கற்பனை செய்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் இயேசுவுக்கு எப்படி பதில் அளித்திருப்பீர்கள்?
- இயேசுவுக்கு கொடுத்து உதவுவதற்கு அந்த சிறுவனிடம் என்ன இருந்தது? மற்றவர்களுக்கு உதவி செய்ய நீங்கள் எதை பயன்படுத்த வேண்டும் என இயேசு விரும்புகிறார்?
- தேவன் உங்களை ஊழியத்தில் பயன்படுத்துவதற்கு நீங்கள் எதில் சிறந்தவர்?
- தேவனை பற்றி நான் அறிந்துக்கொண்டது என்னவென்றால்?................................

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்று கற்றுக்கொண்டதிலிருந்து, நீங்கள் எதை செய்ய தேவன் விரும்புகிறார் என நினைக்கிறீர்கள்? அவருடைய கதையில் நீங்கள் எப்படி பங்கு பெற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?
- இந்த வார கதையை யாரிடம் பகிரப் போகிறீர்கள்?

**வேதாகம கதை (தொடர்ச்சி)**

அதற்கு அவர்கள், “எங்களிடம் ஐந்து அப்பங்களும் ஐந்து மீன்களும் உண்டு. இந்த ஜனங்கள் எல்லாருக்கும் உணவுக் கொடுக்க வேண்டும் என்றால் ஒரு வருடத்தின் சம்பளத்தொகை தேவைப்படும். ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்கள் இருந்தார்கள்” என்றனர். இயேசு சீஷர்களிடம் அவர்களை புல்லில் அமர வைக்கச் சொன்னார்.

அப்பொழுது அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்தார்.

அவைகளைப் பிட்டு ஜனங்களிடம் கொடுக்கும்படி சீஷர்களுக்கு சொன்னார். எல்லாரும் சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள். மீதியான துண்டுகளை பன்னிரெண்டு கூடைகள் நிறைய எடுத்தார்கள்.

8) **நிறைவு ஆசீர்வாதம்:**

தேவனே, நீர் எங்களை அநேக விதங்களில் ஆசீர்வதித்திருக்கிறீர். தேவையுள்ள ஒருவரை காணும்போது அவர்களுக்கு உதவும் எண்ணத்தை ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் தந்து ஆசீர்வதியும். உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் நீர் பிரியப்படுகிறீர். நாங்கள் கொடுக்கும் அளவிற்கு எங்களை ஆசீர்வதித்ததற்காக நன்றி. அப்பொஸ்தலர் 2:44 யை வாசிக்கவும்.

# பர்த்திமேயு சுகமடைதல்

 லூக்கா 18:35-43

**1) கண்ணோட்டம்:**

- யாரிடமாவது இக்கதைகளை சொல்ல முடிந்ததா?
- அது எப்படி இருந்தது? கேட்டவரின் செயல்பாடு எப்படி இருந்தது?

**2) ஆரம்பம்:**

உங்களுக்கு நடக்கக்கூடிய மிக மோசமான நிகழ்வு எதுவாக இருக்கும்: செய்யாத குற்றத்திற்காக குற்றம் சாட்டப்படுவது அல்லது விரும்பாத பெயரால் அழைக்கப்படுவது?

**3) பின்னனி:** →

**4) வேதாகம கதையை கூறு:** →

**5) திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**வரிசைபடு:** கதையின் ஒவ்வொரு பகுதியையும் தனிதனி தாள்களில் எழுதவும். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு தாளை கொடுக்கவும். கதையின் அடுத்தடுத்த பகுதிக்கு ஏற்ப பிள்ளைகள் வரிசைப்பட்டு நிற்கவேண்டும்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/CVLRdf

**பின்னனி:** தயவாய் இருப்பது என்றால் ஒருவர் மீது கரிசனையாகவும், கனிவாகவும் நடந்துக் கொள்வதாகும்.

இந்தக் கதையில் இயேசு தாவீதின் குமாரன் என்று அழைக்கப்படபோகிறார். இயேசு தான் ஜனங்களை பாவத்திலிருந்து மீட்பதற்காக தேவனால் வாக்குதத்தம் பண்ணப்பட்டவர் என்று ஜனங்கள் நம்பினதை இது காட்டுகிறது. பாவம் என்பது தேவனுக்கு பிடிக்காத அவரை அவமதிக்கிற செயல்கள் செய்வதாகும்.

**வேதாகம கதை:** இயேசு எரிக்கோவுக்கு சமீபமாய் வந்தபோது ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். ஜனங்கள் நடக்கிற சத்தத்தை கேட்டு, "என்ன நடக்கிறது" என்றான். "நசரேயனாகிய இயேசு போகிறார்" என்று கூறினார்கள்.

அந்த குருடன், "இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" என்றான்.

முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ, "தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" என்று இன்னும் அதிகமாய் கூப்பிட்டான். இயேசு நின்று அவனை தம்மிடம் கொண்டுவரும்படி சொன்னார். அவன் கிட்ட வந்தபோது, அவனிடம், "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அவன், "நான் பார்வையடைய வேண்டும்" என்றான். இயேசு அவனை பார்த்து, "நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றார்.

உடனே அவன் பார்வையடைந்து தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்தான். இயேசுவை பின்தொடர்ந்தான். ஜனங்கள் அதை கண்டு தேவனை புகழ்ந்தார்கள்.

6) **கண்டறிய கேள்விகள்:**

- கதையை கூறும்போது நீங்கள் எதை கற்பனை செய்தீர்கள்? உங்களால் ஏதாவது கேட்கமுடிகிறதா? நீங்கள் எதை பார்க்க முடிகிறது?
- மக்கள் எப்படிப்பட்ட தீர்மானங்களை எடுத்தார்கள்? அவர்கள் வேறென்ன செய்திருக்கலாம்? அவர்கள் எடுத்த தீர்மானத்தினால் என்ன நடந்தது?
- நீங்கள் பர்த்தியுமேயுவாக இருந்திருந்தால், பார்வை அடைந்தவுடன் எப்படி உணர்ந்திருப்பீர்கள்?
- இயேசுவிடம் அவன் பேசின முதல் வார்த்தை என்னவாக இருந்திருக்கும் என நான் சிந்திக்கிறேன்.
- இயேசு நின்று உங்களுக்கு உதவ வேண்டும் என்றால் நீங்கள் எப்படி இயேசுவை அழைத்திருப்பீர்கள்?
- தேவனை பற்றி நான் கற்றுக்கொண்டது என்னவென்றால் ................. நீங்கள் கற்றுக்கொண்டது தேவனை நேசிப்பதிலும் அவருக்காக (ஊழியத்திற்காக) வாழ்வதிலும் எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும்?

7) **தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்று நீங்கள் கற்றதிலிருந்து தேவன் நீங்கள் எதை செய்ய வேண்டும் என்று கேட்கிறார்?
- இந்த வாரத்தில் யாரிடம் இக்கதையை கூறமுடியும்?

8) **நிறைவு ஆசீர்வாதம்:** பிதாவாகிய தேவனே, இப்பிள்ளைகளை உமது அரவணைப்பால் ஆசீர்வதியும். உமது ஆறுதல் தரும் குரலை கேட்கும்படி அவர்களை ஆசீர்வதியும். உம்மை எப்படி பின்பற்றுவது என்று அறிவார்களாக. ஏசாயா 30:19 யை படிக்கவும்.

# இயேசுவும் சகேயுவும்

லூக்கா 19:1-10

1) **கண்ணோட்டம்:**

- கடந்த வாரம் எந்த விதங்களிலெல்லாம் தேவனை பின்பற்ற உங்களால் முடிந்தது?
- கடந்த வாரத்தில் நீங்கள் எதிர்கொண்ட தனிப்பட்ட பதில்கள் என்னென்ன?
- அது எப்படி தன்னிடத்தில் தேவன் எதிர்பார்த்ததை நம்பி கீழ்படிய உதவினது?

2) **ஆரம்பம்:** நீங்கள் தனித்துவிடப்பட்ட அனுபவத்தைப் பற்றி கூறுங்கள்.

3) **பின்னனி:** →

4) **வேதாகம கதையைக் கூறு:** →

5) **திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**நடித்துக் காட்டு**:

உங்கள் குழுவில் உள்ள பிள்ளைகளுக்கு தனித்தனி வேடங்களை கொடுக்கவும். சிறிது கால அவகாசம் கொடுத்த பின் அவர்கள் கதையை நடித்துக்காட்டின பின் திரும்பக் கூறச் செய்யுங்கள்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/B3o9qb

**பின்னனி:** இயேசு எருசலேமுக்கு போகும் வழியில் கடைசியாக எரிக்கோ என்னும் பட்டணத்தில் சற்று நின்றார். அநேக ஜனங்கள் அருகே இருந்தனர். ஆனால் ஒருவர் மாத்திரம் இயேசுவை பார்ப்பதற்கு மிகுந்த சிறமப்பட்டார். அவர் என்ன செய்தார் என்று பார்ப்போம்.

**வேதாகம கதை:** இயேசு எரிக்கோவின் வழியாக நடந்துப் போகையில் ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சக்கேயு என்னப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான். இயேசு எப்படிப்பட்டவரோ என பார்க்க விரும்பினான். அவன் குள்ளனாக இருந்ததால் ஜனக் கூட்டத்தில் அவரைக் காணமுடியவில்லை.

அவர் போகும் வழியில் முன்பாக ஓடி அவரை பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அந்த இடத்திற்கு வந்தபோது அண்ணார்ந்து பார்த்து அவனை கண்டு, "சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும்" என்றார்.

அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான். அதை கண்ட யாவரும் "இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார்" என்று முறுமுறுத்தார்கள்.

(கதை அடுத்த பக்கத்தில் தொடரும்)

**கண்டறி கேள்விகள்:**

- கதையின் எந்த பகுதி உண்மையில் உங்களுக்கு பிடித்தது?
- ஒரு வேளை இயேசு உங்கள் வீட்டிற்கு வரலாமா என்று கேட்டால் எப்படி பதிலளிப்பீர்கள்? அப்பொழுது உங்களுக்கு எப்படி இருக்கும்? அவர் உங்களோடு இருக்கும் நேரத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்?
- கதையில் உள்ள வெவ்வேறான மனிதர்கள் யார் யார்?
- சகேயு இயேசுவை பார்க்கும்படி முடிந்தவரை அவரை நெருங்கினான். அவன் ஏன் அப்படி செய்ய வேண்டும்? நீங்கள் ஏன் இயேசுவுடன் நெருக்கமாக இருக்க விரும்புகிறீர்கள்?
- தேவனோடு நெருக்கமாக இருக்கும்போது எப்படி உணர்கிறீர்கள்?
- இன்று நாம் இயேசுவுடன் எப்படி நெருக்கமாக இருக்க முடியும்? (பிள்ளைகள் இயேசுவை பின்தொடர்கிறவர்களாக மாறுவதற்கு இது ஏற்ற தருனமாய் இருக்கும்)
- தேவன் ஏன் இந்த கதையை வேதத்தில் வைத்தார் என்று சிந்திக்கிறேன்.
- தேவனை பற்றி நான் கற்றுக்கொண்டது என்னவென்றால் ...............................

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்று நீங்கள் கற்றுக்கொண்டதிலிருந்து தேவன் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்? என நினைக்கிறீர்கள்?

**வேதாகம கதை** (தொடர்ச்சி)

சகேயு நின்று கர்த்தரை நோக்கி, “ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்” என்றான்.

இயேசு அவனை நோக்கி, “இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. இழந்துப் போனதை தேடவும் இரட்சிக்கவுமே நான் வந்தேன்”.

**8) நிறைவு ஆசீர்வாதம்:**

எங்களுக்கு போதும் என்ற மனதை கொடுத்து ஆசீர்வதியும். ஒவ்வொரு பிள்ளைகளையும் உதாரத்துவமான ஆவியினால் ஆசீர்வதியும். இலவசமாய் பிறருக்கு கொடுக்கும் போது நீர் அவர்களின் தேவைகளை சந்திப்பீர் என்று அறிந்து பிறரை ஆசீர்வதிக்க உதவும். 1 தீமோத்தேயு 6:6-8 யை படிக்கவும்.

KIDStory

# விதவையின் காணிக்கை

லூக்கா 21:1-4

**1) கண்ணோட்டம்:**

முன்பு கூறின கதைகளைப் பார்க்கவும். பிள்ளைகள் அக்கதைகளை திரும்பக் கூறுகிறார்களா என பார்க்கவும். அவைகளில் அநேக கதைகள் கொடுப்பதை பற்றியது. கொடுப்பதை பற்றி தேவன் பிள்ளைகளிடம் என்ன கூறுகிறார் என்று கண்டறியுங்கள்.

**2) ஆரம்பம்:** உங்களிடம் நிறைய பணம் இருந்தால் அதை வைத்து என்ன செய்வீர்கள்?

**3) பின்னனி:** →

**4) வேதாகம கதையைக் கூறு:** →

**5) திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**உன் ஜோடியிடம் கூறு:** இந்த கதை மிக சிறியது. உங்கள் குழுவை ஜோடிகளாக சேர வையுங்கள். இருவரில் ஒருவர் கதையை தன் ஜோடியிடம் முடிந்தவரை கூற வேண்டும். மற்றொருவர் அக்கதையை மீண்டும் கூற வேண்டும். பின்பு இரண்டு ஜோடிகள் ஒன்று சேர வேண்டும். ஒரு ஜோடி கதையை கூற மற்ற ஜோடி மீண்டும் கூற வேண்டும்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/vs9yVn

**பின்னனி:** பிள்ளைகள் சபைக்கு கொண்டுவரும் காணிக்கையை குறித்து ஒரு சிறு கலந்துரையாடல் செய்யவும். நீங்கள் கேட்கக் கூடிய சில கேள்விகள் இதோ:

- நீங்கள் ஏன் காணிக்கை கொண்டு வருகிறீர்கள்?
- அந்த காணிக்கை எதற்கு பயன்படுத்தப்படுகிறது என யோசிக்கிறேன்.
- நான் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என சிந்திக்கிறேன்.

**வேதாகம கதை:** ஒரு நாள் இயேசு தேவாலயத்தில் காணிக்கை பெட்டியின் அருகே அமர்ந்திருந்தார். கண்ணேறிட்டு பார்த்த போது ஐஸ்வரியவான்கள் காணிக்கை பெட்டியிலே அதிகமான காணிக்கைகளைப் போட கண்டார்.

ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசை போடுகிறதை கண்டார். தம்மை பின்தொடர்ந்தவர்களை பார்த்து, "இந்த ஒரு ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாக போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.

அவர்களெல்லாரும் தங்களுக்கு தேவையில்லாததைக் கொடுத்தார்கள். இந்த பெண் ஒரு ஏழை ஆனால் தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள்" என்றார்.

**6) கண்டறி கேள்விகள்:**

- கதை கூறும் போது எதை குறித்து ஆச்சரியப்பட்டீர்கள்? உங்கள் கற்பனை திறனைக் கொண்டு எவற்றை பார்த்தீர்கள்/ கேட்டீர்கள்?
- இரண்டு காசுகளை மாத்திரம் போட்ட அந்த பெண்ணை பார்த்து இயேசுவின் எதிர் செயல் என்ன? அவள் அப்படிச் செய்தபோது அவர் எப்படி உணர்ந்திருப்பார்?
- இதிலிருந்து தேவனுக்கு எது முக்கியமானது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- அவள் அவ்வளவு சிறிய தொகை கொடுத்திருந்தும், இயேசு ஏன் அப்படி சொன்னார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- என்னால் ஏதாவது கொடுக்கக் கூடுமானால், இயேசுவுக்கு நான் ………………………….. தர விரும்புகிறேன்.
- பெற்றுக் கொள்ளும்படி இயேசுவுக்கு முக்கியமான எது என்னிடத்தில் இருக்கிறது என சிந்திக்கிறேன்.
- தேவனைப் பற்றி நான் கற்றுக் கொண்டது என்னவென்றால் ………………………….

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்றைய கதையில் அந்த விதவையைப் போல நீங்களும் பங்கு கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார். எந்த விதத்தில் நீங்கள் பங்கு கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார் என நினைக்கிறீர்கள்?
- இந்த வாரத்தில் யாரிடம் இந்த கதையை பகிர்ந்துக் கொள்ள போகிறீர்கள்?

**8) நிறைவு ஆசீர்வாதம்:** ஆண்டவரே, எங்கள் கண்களையும், காதுகளையும், இருதயத்தையும் ஆசீர்வதியும். எங்களை சுற்றி உள்ளவர்களின் தேவைகளை கண்டு, நாங்கள் கொடுக்க வேண்டும் என நீர் நினைக்கிறவைகளைக் கொடுக்க நாங்கள் விருப்பம் உள்ளவர்களாக இருக்க உதவும். யாக்கோபு 1:27 யை படிக்கவும்.

KIDStory

# கடைசி பந்தி

லூக்கா 22:13-20, 31-34

1) **கண்ணோட்டம்:**

கடந்த வாரம் கற்றுக் கொண்ட கதை யாருக்கு ஞாபகம் இருக்கிறது? யார் கதையைச் சொல்ல முடியும்?

2) **ஆரம்பம்:** நீங்கள் சாப்பிட விரும்பும் அனைத்தும் உங்களுக்கு கிடைத்தால் எப்படி இருக்கும்?

3) **பின்னனி:**

4) **வேதாகம கதையைக் கூறு:**

5) **திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்**: கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**வர்ணம் படைத்தல்:** ஒரு பெரிய வெள்ளை தாளை எடுத்து வர்ணம் தீட்டும் உபகரணங்களை பிள்ளைகளிடம் கொடுத்து, கதையின் ஒவ்வொரு தொகுப்பையும் போஸ்டர் வடிவில் வரைய விடவும். நேரம் இருந்தால் பிள்ளைகள் தங்கள் போஸ்டரைக் கொண்டு கதையை கூறச் செய்யலாம்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/2jhou3

**பின்னனி:**

யூதர்களுக்கு ‘பஸ்கா’ என்பது விசேஷித்த விடுமுறை நாள். கடுமையான நேரங்களிலிருந்து தேவன் தமது மக்களை காப்பாற்றிய நிகழ்வை கொண்டாடும் நேரம் தான் அது. உண்மையில் இந்த நாள் வரை கொண்டாடப்படுகிறது. சங்கார தூதன் (மரணத்தின் தூதன்) யூதர்களின் வீடுகளை கடந்து போனது, ‘பஸ்கா’ என்று அழைக்கப்படுகிறது. பழுதற்ற ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை வீட்டின் நிலைக்கால்களில் பூசின போது இது நடந்தது. சங்கார தூதன் அதை பார்க்கும் போது அந்த வீட்டை ‘கடந்து போக’ அது ஒரு அடையாளமாக இருந்தது. இயேசு ‘பஸ்கா ஆட்டுக்குட்டி’ என அழைக்கப்பட்டார். அவர் உலகத்தின் பாவத்தை போக்குகிறவர். இயேசு தம்மை உண்மையாய் பின் தொடர்ந்த சீடர்களுக்கு தமது மரணத்தைப் பற்றி கூற முயற்சித்தார். தமது சீடர்களுடன் கடைசியாக பந்தி இருக்க காரியங்களை ஆயத்தப்படுத்தினார் அது பஸ்கா விருந்தாக மாறினது.

பஸ்கா பந்தியைப் பற்றி தமது சீடர்கள் அறிய வேண்டிய சில காரியங்களை இயேசு செய்தார். பூமியிலிருந்து வந்த அப்பத்திற்காக இயேசு தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெபிக்கும் போது, அது தமது சீடர்கள் பின் நாட்களில் நினைவு கூற உதவும்.

அதுமட்டுமல்லாமல், பஸ்கா உணவின் போது தேவன் தந்த வாக்குத்தத்தங்களை நினைவு கூறும் விதமாக திரசட்சைரசத்தைப் பானம் பண்ணினார்கள். அந்த திராட்சைரசத்தின் கோப்பை தேவன் தமது விரிக்கப்பட்ட கரத்துடன் அவர்களை இரட்சிப்பார் என்பதை அவர்களுக்கு நினைவுப்படுத்தும்.

**வேதாகம கதை:** பேதுருவும், யோவானும், தங்களிடத்தில் அவர் சொன்னபடியே கண்டு பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

(கதை அடுத்த பக்கத்தில் தொடரும்)

**6) கண்டறிய கேள்விகள்:**

- கதையில் நீங்கள் இருப்பது போல் கற்பனை செய்ய முடிகிறதா? நீங்கள் எதை கண்டீர்கள்/ கேட்டீர்கள்?
- சீஷர்களுக்கு, தாங்கள் நேசித்த போதகரான இயேசு தாம் மரிக்கப் போவதாக கூறும் போது எப்படி இருந்திருக்கும்?
- நீங்கள் சீடர்களில் ஒருவராக இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள் அல்லது சொல்லியிருப்பீர்கள்? அது உங்களை எப்படி உணர வைக்கிறது?
- எந்தெந்த விதங்களிலே நாம் இயேசுவை பின்பற்றுகிறவர்கள் என்று மக்கள் அறியாமல் இருக்கச் செய்கிறோம்?
- தேவனை எது துக்கப்படுத்துகிறது என சிந்திக்கிறேன்.
- தேவன் இந்த கதையை ஏன் வேதாகமத்தில் வைத்தார் என சிந்திக்கிறேன்.
- நான் இன்று தேவன் ........................ என்று அறிந்துக்கொண்டேன். தேவனை நேசிப்பதிலும் அவருக்காக வாழ்வதிலும் (ஊழியம் செய்வதிலும்) அது எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும்?

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- இன்று நாம் பேசினதில் இருந்து பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறார் என்று உணர்கிறீர்கள்?
- இன்று கற்றுக்கொண்டதிலிருந்து, தேவன் உங்களை என்ன செய்யும்படி கேட்கிறார் என எண்ணுகிறீர்கள்?

**வேதாகம கதை:**

வேளை வந்தபோது இயேசுவும் அப்பொஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அவர் அவர்களை பார்த்து, ‘‘நான் பாடுபடுவதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இதன் உண்மை அர்த்தம் விளங்கும்வரை நான் இனி இதை புசிப்பதில்லை’’ என்றார்.

பின்பு இயேசு அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, அவர்களுக்கு கொடுத்து, ‘‘இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது, என்னை நினைவு கூறும்படி இதை செய்யுங்கள்’’ என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தை எடுத்து, ‘‘இந்த பாத்திரம் உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது’’ என்றார்.

பின்பு அவர், ‘‘சீமோனே சீமோனே, இந்தக் கோதுமையைச் சுளக்கினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துப் போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து’’ என்றார்.

அதற்கு பேதுரு, ‘‘ஆண்டவரே காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன்’’ என்றான்.

இயேசு, ‘‘பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய்’’ என்றார்.

**8) நிறைவு ஆசீர்வாதம்:**

பிதாவே இந்த பிள்ளைகள் உமது தூதர்களாக இருக்கும்படி உமது வல்லமையினால் இவர்களை ஆசீர்வதியும். அவர்கள் உமது நன்மையையும், மகத்துவத்தையும் குறித்து மற்றவர்களுக்கு எடுத்துரைப்பார்களாக. இயேசுவுக்காக வாழ தைரியம் கொள்ளும்படி ஆசீர்வதியும். பரிசுத்த ஆவியானவரே உமது ஜீவனால் அவர்களை ஆசீர்வதியும். 2 கொரிந்தியர் 3:4-6 யை படிக்கவும்.

# இயேசு சிலுவையில் அறையப்பட்டார்

லூக்கா 23:20-26, 44-48

1) **கண்ணோட்டம்:**

ஒவ்வொரு கதையின் முடிவிலும் தேவன் அந்த கதை மூலம் என்ன காண்பிக்கிறார் என பேசியிருக்கிறோம். தேவன் உங்களிடத்தில் கேட்டவற்றிற்கு எந்த விதத்தில் நீங்கள் கீழ்படிந்தீர்கள்?

**2) ஆரம்பம்:** யாராவது உங்களிடத்தில் மிகவும் கீழ்த்தனமாக நடந்துக் கொண்டது உண்டானால் அந்த அனுபவத்தைப் பற்றி கூறுங்கள்.

3) **பின்னனி:** →

4) **வேதாகம கதையைக் கூறு:** →

5) **திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**கயிறு விளையாட்டு:** 15 அடி நீளம் உள்ள ஒரு கயிறை எடுத்து அதின் முனைகளை முடிச்சி போடவும். கயிறை பிடித்த வண்ணம் பிள்ளைகளை வட்டமாக உட்கார வைக்கவும். ‘Go’ என்று சொல்லும் போது கயிறை ஏதேனும் ஒரு திசையில் நகற்ற வேண்டும். ‘Stop’ என்று சொல்லும் போது அந்த முடிச்சியின் அருகில் உள்ளவர் கதையின் அடுத்தப் பகுதியை கூற வேண்டும். கதை முழவதும் கூறும்வரை விளையாடவும்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/gk5q89

**பின்னனி:**

இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டார். காவலர்களால் அடிக்கப்பட்டு வாதிக்கப்பட்டார். ஜனங்கள் அவரை அவதூரான வார்த்தைகளைச் சொல்லி கத்தினார்கள். அது ஒரு துக்ககரமான நாள். அவருக்கு இவ்வளவு கீழ்த்தனமான காரியங்களை ஜனங்கள் செய்திருந்தாலும் இயேசு, “பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னது என்று அறியாமல் செய்கிறார்கள்” என்றார். இன்றுவரை அந்த நாள் ‘புனித வெள்ளி’ என்று அனுசரிக்கப்படுகிறது. கதையை கவனமாக கவனியுங்கள். ஏன் அந்த நாள் இப்படி அழைக்கப்படுகிறது என அறிந்துக் கொள்ள முடியும். பிலாத்து ஒரு ஜனாதிபதி அல்லது ராஜாவுக்கு ஒப்பான ஸ்தானத்தில் இருப்பவன் என்றும் அறிந்துக் கொள்ளுங்கள்.

**வேதாகம கதை:** பிலாத்து இயேசுவை விடுதலையாக்க மனதாய் மறுபடியும் ஜனங்களிடத்தில் பேசினான். அவர்களோ, “அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்” என்று கூக்குரலிட்டார்கள்.

அவன் மூன்றாந்தரம் அவர்களை நோக்கி “ஏன், இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே; ஆகையால் நான் இவனை தண்டித்து விடுதலையாக்குவேன்” என்றான். ஆனால் அவரைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று அவர்கள் உரத்த சத்தத்தோடே கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் அதிகமாய் கூச்சலிட்டதால் அவன் அவர்கள் கேட்டுக் கொண்டபடியே செய்தான். இயேசுவை அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக் கொடுத்தான்.

அவர்கள் இயேசுவை கொண்டு போகிறபோது நாட்டிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து சிலுவையை அவர் பின்னே சுமந்துக் கொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள்.

(கதை அடுத்த பக்கத்தில் தொடரும்)

**6) கண்டறி கேள்விகள்:**

- இயேசுவுக்கு ஏற்பட்ட அனைத்தையும் அங்கே இருந்து பார்த்தது போல் உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? கதையை கூறும்போது எதைக்குறித்து பிரம்மித்தீர்கள்?
- கதையை கூறும்போது எப்படிப்பட்ட உணர்ச்சிகளை உணர்ந்தீர்கள்?
- ஜனங்கள் ஏன் அவரை அப்படி நடத்தினார்கள்? அவர் வேறென்ன செய்திருக்கலாம் என நினைக்கிறீர்கள்? மக்கள் எப்படிப்பட்ட தீர்மானங்களை எடுத்தனர்? இயேசு எடுத்த தீர்மானத்தின் விளைவு என்ன? இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலம் தேவன் அளித்த வாக்குத்தத்தங்களை குறித்து பகிர்ந்துக்கொள்ள இது ஏற்ற சமயமாய் இருக்கலாம்.
- தேவன் இப்படிப்பட்டவர் என்று கற்றுக் கொண்டேன் ………………………………
- எனக்காக இயேசு இவற்றை செய்ததினிமித்தம் நான் இதை செய்ய விரும்புகிறேன் ……………………………

**7) தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- தேவன் (பரிசுத்த ஆவியானவர்) என்னிடம் சொல்லும் காரியம் இது தான் என நம்புகிறேன். ……………………………..
- இந்த வாரத்தில் யாரிடம் இக்கதையை பகிரப்போகிறீர்கள்?

**வேதாகம கதை (தொடர்ச்சி)**

அப்பொழுது ஏறக்குறைய மதியான நேரமாயிருந்தது; மதியம் மூன்று மணி அளவில் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. சூரியன் இருளடைந்தது, தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்ததது. இயேசு, ‘‘பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்’’ என்று மிகச் சத்தமாய் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்.

படை அதிகாரி சம்பவித்ததைக் கண்டு, ‘‘மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான்’’ என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினான்.

இந்தக் காட்சியைப் பார்க்கும்படி கூடிவந்திருந்த ஜனங்களெல்லாரும் சம்பவித்ததைப் பார்த்தபோது தங்கள் மார்பில் அடித்துக் கொண்டு திரும்பிப் போனார்கள்.

**8) நிறைவு ஆசீர்வாதம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, இயேசுவை எங்களுக்காக தந்தீரே உமக்கு நன்றி. ஜனங்கள் அவரை துன்பப்படுத்தி சிலுவையில் அறைந்ததற்கு மன்னிப்பு கேட்கிறோம். நீர் இந்த பிள்ளைகளை எவ்வளவு நேசிக்கிறீர் என்றும் அவர்களோடே இருக்க நீர் அதிகமாய் விரும்புவதையும் அவர்கள் புரிந்துக் கொள்ளும்படி இவர்களை ஆசீர்வதியும். யோவான் 3:16-17 யை வாசிக்கவும்.

KIDStory

# காலியான கல்லறை

லூக்கா 24:1-12

**1) கண்ணோட்டம்:**

ஒவ்வொரு கதையின் முடிவிலும் தேவன் அந்த கதை மூலம் என்ன காண்பிக்கிறார் என பேசியிருக்கிறோம். தேவன் உங்களிடத்தில் கேட்டவற்றிற்கு எந்த விதத்தில் நீங்கள் கீழ்படிந்தீர்கள்?

**2) ஆரம்பம்:**

எதை குறித்து நீங்கள் மிகவும் சந்தோஷப்படுவீர்கள்?

**3) பின்னனி:** →

**4) வேதாகம கதையை கூறு:** →

**5) திரும்பக் கூறு:**

**கதை கண்ணோட்டம்:** கேள்விகள், நிரப்புக, திருத்தம் செய் போன்ற பயிற்சி கொடுத்து மீண்டும் கதைக்கு செல்லுங்கள். அவர்களிடம் வேதாகமம் இருந்தால் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாம்.

**இசை நாற்காலி:** குழுவில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையில் ஒன்று குறைய அனைத்து நாற்காலிகளையும் வட்டமாக அடுக்கவும். நாற்காலிகள் வெளிப்புறமாக நோக்கி இருக்க வேண்டும். இசை ஒலிக்கும் போது பிள்ளைகள் கடிகார திசையில் நாற்காலிகளைச் சுற்றி வர வேண்டும். இசையை அமர்த்தியவுடன் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இருக்கையில் அமர வேண்டும். நாற்காலி இல்லாமல் நிற்பவர் கதையின் அடுத்த பகுதியை கூற வேண்டும். கதையை முழுமையாக கூறும் வரை விளையாடவும்.

**ஜீசஸ் பிளிம் அடுத்தடுத்த தொகுப்புகள்:**

- Jesus Film app யில் காணலாம்.
- தலைப்பின் அருகே உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்.
- வீடியோ இணைப்பு: https://goo.gl/g3ZNuM

**பின்னனி:**

இயேசு ஒரு வெள்ளிக்கிழமை அன்று மரித்தார். அவரை பின் தொடர்ந்தவர்கள் மிகவும் வருத்தத்துடன் இருந்தார்கள். இயேசு அவர்களை இரட்சிக்க வந்தார் என்று அவர்கள் நம்பியிருந்த நிலையில் அவர் மரித்துப் போனது பெரும் குழப்பத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியது. சனிக்கிழமையும் கடந்து போனது ஏதும் நடக்கவில்லை. அது ஒரு ஓய்வு நாள். மரித்தவர்களுக்கு எண்ணையையும் வாசனை திரவியமும் பூசுவது அவர்களது வழக்கமாய் இருந்தபடியால், ஞாயிற்று கிழமை காலையில் சில ஸ்திரீகள் இயேசுவின் கல்லறைக்கு சென்றனர்.

**வேதாகம கதை:** வாரத்தின் முதலாம் நாள் (ஞாயிற்று கிழமை) அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் பண்ணின கந்தவர்க்கங்களை எடுத்துக்கொண்டு ஸ்திரீகள் கல்லறையினிடத்தில் வந்தார்கள். கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு, உள்ளே சென்று பார்த்தபோது, இயேசுவின் சரீரம் காணப்படவில்லை.

அதைக் குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில் பிரகாசமுள்ள ஆடை அணிந்த இரண்டு பேர் அவர்கள் அருகே நின்றார்கள். அந்த ஸ்திரீகள் பயப்பட்டு தலைக்கவிழ்ந்து தரையை நோக்கி நிற்கையில் அந்த இரண்டு பேரும் அவர்களை நோக்கி, “உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டும் என்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுக் கூறுங்கள் என்றார்கள். அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைவு கூர்ந்தார்கள்.

(கதை அடுத்த பக்கத்தில் தொடரும்)

6) **கண்டறி கேள்விகள்:**

- கதையின் எந்த பகுதி உங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது?
- கதை சொல்லும் போது எதைக் குறித்து ஆச்சரியப்பட்டீர்கள்?
- தேவன் இக்கதையில் எடுத்திருந்த தீர்மானங்கள் எவை? அதை குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
- கல்லறையினிடத்திற்கு வந்த ஸ்திரீயின் இடத்தில் உங்களை கற்பனை செய்துக் கொண்டு கதையில் கடந்துச் செல்லுங்கள். பயப்படாதிருங்கள் என்று அவர்களுக்கு சொன்ன போது அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள்?
- பேதுருவாக இருப்பதுபோல் கற்பனை செய்துக் கொள்ளுங்கள் கதையில் அவன் எப்படி உணர்ந்தான்? கல்லறையில் இயேசு இல்லாமல் காலியாக இருந்தபோது எப்படி உணர்ந்திருப்பான்? அவன் வீட்டிற்கு திரும்பும் வழியில் எதை குறித்து ஆச்சரியப்பட்டிருப்பான்?
- உங்கள் குடும்பத்திலோ அல்லது சமுதாயத்திலோ உங்களை பயப்பட வைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா? அந்த ஸ்திரீகளுக்கு தூதர்களைக் கொண்டு பேசினதுபோல உங்களுக்கு தேவன் என்ன சொல்ல விரும்புவார்?
- இப்பொழுது இயேசு எங்கே இருக்கிறார் என்று யோசிக்கிறீர்கள்?
- இயேசுவைப் பற்றி நான் அறிந்துக் கொண்டது என்ன வென்றால் ……………………………………. அவரை நேசிப்பதிலும் அவருக்காக வாழ்வதிலும் (ஊழியம்) இது எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும்?

7) **தனிப்பட்ட பதில் கேள்விகள்:**

- தேவன் (பரிசுத்த ஆவியானவர்) எனக்கு சொல்ல விரும்பும் காரியம் என்னவென்றால் …………………………………………………….
- இந்த வார கதையை யாரிடம் உங்களால் கூற முடியும்?

**வேதாகம கதை (தொடர்ச்சி)**

அந்த ஸ்திரீகள் கல்லறையை விட்டு திரும்பிப் போய் இந்த சங்கதிகளை பதினொருவருக்கும் மற்ற எல்லாருக்கும் அறிவித்தார்கள். ஆனால் அவர்களுடைய வார்த்தைகளை இவர்கள் நம்பவில்லை, பேதுருவோ எழுந்திருந்து, கல்லறையினிடத்திற்கு ஓடி, அதற்குள்ளே குனிந்து பார்க்கையில், சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக்கண்டு சம்பவித்ததை குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக்கொண்டே போனான்.

8) **நிறைவு ஆசிர்வாதம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே இயேசுவை எங்களுக்காக அனுப்பினதற்காக நன்றி. அவர் மரித்தவராக அல்ல உயிரோடு இருக்கிறவராக இருக்கிறபடியால் நன்றி. நீர் சிறந்த, உயர்ந்த தேவன் என்பதை மற்றவர்களுக்கு கூறக்கூடிய வைராக்கியத்தை இந்த பிள்ளைகளுக்கு கொடுத்து ஆசீர்வதியும்.

**வேதாகம கதையை திரும்பக் கூறுவது மிகவும் முக்கியமானது. இதனால் பிள்ளைகள் கதையில் ஈடுபடுவ தோடு கதையை நன்றாக கற்றுக் கொள்ள முடியும். மற்றவர்களிடம் இக்கதையை திரும்பக் கூறவும் உதவும்.**

திரும்பக் கூறும் செயல்பாடு கேளிக்கை நிறைந்ததாகவும் பிள்ளைகளை கதையில் ஈடுபட செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். பிள்ளைகளை பல்வேறு விதத்தில் ஈடுபடுத்தி கதையை திரும்பக் கூறுவதற்கு கீழே பல வழிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. பட்டியலில் இல்லாத ஒரு வழி என்னவென்றால், வேதாகமம் உடைய பிள்ளைகளை வேதத்தை திறந்து கதையை, படித்து மீண்டும் படிக்க செய்வதாகும். ஒருவர் கதையை படிக்க, தலைவர் அடுத்தடுத்த கேள்விகளை கேட்ட அனைவரும் வேதத்தை பார்த்து பதிலளிப்பது மற்றொரு முறையாகும்.

■ **கலை**

- **ஓவியம் (Drawing)**: உங்களிடத்தில் தேவையான பொருட்கள் இருத்தால், பிள்ளைகள் கதையை கேட்ட போது அவர்களுக்கு மிகவும் பிடித்த பகுதியை வரைந்து காட்ட வைக்கலாம். ஒவ்வொரு பிள்ளையும் தான் வரைந்து படத்தை மற்ற குழுவினருக்கு காட்டச் சொல்லவும். கதையிலிருந்து பல்வேறு காட்சிகள் இருந்தால், பிள்ளைகள் அதை வரிசைப்படுத்த வைக்கவும்.
- **க்ருப் போஸ்டர் (Group poster)**: உங்களிடத்தில் தேவையான பொருட்கள் இருத்தால், பிள்ளைகளை ஒன்றாக சேர்ந்து வேதாகம கதையை விளக்கக் கூடிய போஸ்டர்களை செய்ய வைக்கவும். தாங்கள் வரைந்த போஸ்டர்களை கொண்டு பிள்ளைகள் கதையை திரும்பக் கூற வைக்கவும்.
- **கதை பாகங்கள் (Story parts)**: ஒவ்வொரு பிள்ளையும் கதையின் குறிப்பிட்ட காட்சியை வரையச் செய்யவும். பின்பு பிள்ளைகள் ஒவ்வொருவரும் வரைந்த காட்சிகளை வரிசைப்படுத்த வேண்டும். பின்னர் அக்கதையை திரும்பக் கூற செய்யவும்.
- **ஆர்ட் அடேக் (Art Attack)**: உங்களிடத்தில் உள்ள பேப்பரையும் மார்க்கரையும் பயன்படுத்தவும். அளவில் பெரிய பேப்பர் இருந்தால் பிள்ளைகள் போஸ்டர் வடிவில் கதையைக் கூறலாம். தனித் தனி பேப்பர்கள் மட்டும் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு பிள்ளையும், கதையில் தனக்கு பிடித்த பகுதியை வரையட்டும். பின்னர் அதை வகுப்பில் மற்றவர்களிடம் பகிரலாம்.
- **காமிக் ஸ்ட்ரிப் (Comic Strip)**: ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு பேப்பரை தரவும். அதை பாதியாக மடிக்கவும், மீண்டும் பாதியாக மடிக்கவும். இவ்வாறு முன்று முறை பாதியாக மடித்தபின் அந்த பேப்பரை விரித்தால் 8 பாகங்களாக இருக்க வேண்டும். கதையில் உள்ள காட்சிக்கு ஏற்ப ஒவ்வொரு பாகங்களில் எளிய வரைபடம் ஒன்று வரையவும். இந்த காமிக் ஸ்ட்ரிப்பை பயன்படுத்தி, பிள்ளைகள் தங்கள் பார்ட்னருக்கு கதையை திரும்பக் கூறச் செய்யவும்.
- **பில் போட்டு (Billboard)**: வழியருகே வைக்கப்படும் பில் போர்டு போன்ற ஒன்றை வேதாகம கதையை விவரிக்கும் வகையில் செய்யவும். அதனுடன் உங்களை தொடர்பு படுத்திக் காண்பிக்கவும்.
- **பிக்ஷனரி (Pictionary)**: தொடர்ச்சி இல்லாத வகையில் கதையின் வெவ்வேறு பகுதிகளை ஒவ்வொரு நபருக்கும் கொடுக்க வேண்டும். அந்த பகுதியை வார்த்தைகள் இன்றி வரைந்து காட்டும் போது மற்ற பிள்ளைகள் அது எந்த பகுதி என்று யூகித்துச் சொல்ல வேண்டும்.
- **கிராப்∴ட்டி வாள் (Graffiti Wall)**: குழுக்களாக பிரிந்து பிள்ளைகள் கதையை சொல்லக் கூடிய வார்த்தைகள் அல்லது வரைப்படங்களை வரைந்து காட்ட வேண்டும்.
- **டீ சர்ட் டிசைன் (Tee Shirt Design)**: கதையின் முக்கிய பகுதியை விவரிக்கக் கூடிய ஒரு டிசைனை டீ சர்ட்டில் உண்டாக்க வேண்டும்.
- **லேகோ டிசைன் (Logo Design)**: வார்த்தைகள் இன்றி வேதாகம கதையை சிறப்பாக கூறக் கூடிய ஒரு வரைபடம் என்றால், அது எதுவாக இருக்கும்? அதை பிள்ளைகள் வரையச் செய்யவும். வரக்கூடிய வாரங்களில் சொல்லப்படும் வேதாகம கதையின் கண்ணோட்டமாக இந்த எளிய வரைப்படத்தை பயன்படுத்தலாம்.
- **புக் கவர் டிசைன் (Book Cover Design)**: வேதாகம கதையில் பல்வேறு பகுதிகளில் தங்களை கவர்ந்த வார்த்தையோ அல்லது படத்தையோ அவர்களது புத்தகத்தின் அட்டையில் வடிவமைத்து வரைய வேண்டும்.
- **ஸ்டோரி புக்ஸ் (Storybooks)**: கதை புத்தகத்தில் உள்ள படத்தையோ வார்த்தையையோ கொண்டு பிள்ளைகள் கதையை திரும்பக் கூற வேண்டும். பிள்ளைகள் தாங்களாகவே ஒன்றை எப்படிச் செய்வது என்பதை அறிய கூடுதல் சாதனப் பக்கத்தைப் பார்க்கவும்.

**வெற்று புத்தகம் உருவாக்குவதற்கு ஓர் சிறந்த உத்தி இதோ. இந்த குட்டி புத்தகத்தை செய்வதில் உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்துக் கொள்ளுங்கள். இந்த fold-a-book உத்தியில் தேரினவுடன், பிள்ளைகள் தாங்கள் எழுதுவதற்கும் விவரித்து காண்பிப்பதற்கும் வெற்று புத்தகத்தை (வேண்டிய அளவில்) உருவாக்குவதில் ஆர்வமாக இருப்பார்கள்.**

**Fold-a-book கற்பித்தல்**

1. நீண்ட சதுரமான (**rectangular**) பேப்பரை நீளவாகில் பாதியாக மடிக்கவும். (இதை சமயங்களில் "ஹாட் டாக்" என நாங்கள் அழைப்போம்).
2. புத்தக வடிவில் மீண்டும் பாதியாக இறுக்கமாக மடிக்கவும்.
3. மீண்டும் பாதியாக இறுக்கமாக மடிக்கவும்.
4. பேப்பரை விரித்து செங்குத்தாக பிடிக்கவும் (மேலிருந்து கீழ்)
5. அகல வாரியாக மீண்டும் பாதியாக மடிக்கவும் (ஹம்பர்கர் மடிப்பு)
6. மடிக்கப்பட்ட முனையிலிருந்து 'X' வரை நடுவில் உள்ள மடிப்பின் வழியாக வெட்டவும்.
7. மீண்டும் பேப்பரை விரிக்கவும்.
8. நீளவாகில் உள்ள மடிப்பிற்கு மீண்டும் செல்லவும் (#1 யில் உள்ளவாறு)
9. கடைசி பகுதிகளை ஒன்றாகும்படி தள்ளவும். அது பிள்ளைக்கு ஏற்ற சிறு புத்தக வடிவில் தானாகவே மடிந்துக்கொள்ளும். நான்கு பகுதிகள் உண்டாகிவிட்டது.










இங்கே வெட்டப்பட்டது









மேற்புற பார்வை

**Cut-And-Staple கற்பித்தல்**

பிள்ளைகளுக்கு ஏற்ற 8, 12 அல்லது 16 பக்க சிறு புத்தகம் ஒரு பேப்பரை (அல்லது பேப்பர்கள்) பாதியாக அல்லது மூன்று முறை மடித்து வெட்டி ஒன்று சேர்க்கப்படுவதால் உருவாக்கப்படுகிறது.



## திரும்பக் கூறும் செயல்பாடுகள் மற்றும் விளக்கங்கள்

### ■ நாடகம் / கலை

- **நடித்துக் காட்டு (Act it out):** ஒவ்வொரு பிள்ளைக்கும் கதையில் உள்ள கதாப்பாத்திரங்களில் ஒன்றை நியமித்து கொடுக்கவும். நடித்துக் காட்டும் முன் அவர்கள் நன்றாக பயிற்சி செய்து பார்க்கவேண்டும். ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள் கதையை கூறும்போது மற்ற பிள்ளைகள் நடித்துக் காட்டட்டும்.
- **திரும்ப கூறு (Retell)** கதாப்பாத்திரத்தின் பார்வையிலிருந்து கதையை திரும்பக் கூறுதல்.
- **பாட்டைக் கட்டு (Create a Song):** வேதாகம கதையை திரும்பக் கூறக் கூடிய ஒரு பாட்டை கட்டு. பிள்ளைகளுக்கு வழக்கமான ஒரு பாடலை தேர்வு செய்து அதின் வார்த்தைகளை மாற்றிப் பாடலாம். இதன் மூலம் வேதாகம கதையைத் திரும்பக் கூறமுடியும். சுயமாக பாடல் உருவாக்கலாம் அல்லது ஒரு ராப் பாடலை தேர்வு செய்யலாம்.
- **பங்காளர்கள் (Partners):** 2 அல்லது 3 பிள்ளைகள் கொண்ட குழுக்கலாக பிரியவும். ஒவ்வொரு பிள்ளையும் கதையைச் சொல்வதற்கு வாய்ப்பு எடுத்துக் கொள்ளவேண்டும். கதையை பாதியில் மறந்துவிட்டால் குழுவில் உள்ள மற்றவர்கள் உதவலாம்.
- **கை செய்கைகள் (Hand Motions):** கதையின் ஒவ்வொரு பாகத்தையும் நினைவில் கொள்ளும் வகையில், மீண்டும் வேதாகம கதைக்குச் சென்று பலவிதமான கை சைகைகளை குழுக்கள் ஏற்படுத்தவும். கதை முழுவதும் சொல்லி முடிக்கும் வரை அநேக கை சைகைகளைச் செய்து காட்டட்டும்.
- **பேன்டோமைம்(Pantomime):** ஒரு குழுவை சிறு சிறு குழுக்களாக பிரித்துக் கொள்ளவும். ஒரு குழு வார்த்தைகள் உபயோகிக்காமல் கதையின் முதல் பகுதியை நடித்துக் காட்ட வேண்டும். மற்றோரு குழு என்ன நடித்துக் காட்டினார்கள் என்று கூறவேண்டும். அடுத்த குழு கதையின் இரண்டாவது பகுதியை நடித்துக்காட்ட மீதியான குழுக்கள் என்ன நடித்துக் காட்டினார்கள் என்று கூறவேண்டும். கதை முழுவதும் கூறும்வரை நடித்துக்காட்டவும். அடுத்த பகுதியை நடித்துக் காட்டும் குழு மறந்துவிட்டால் அவர்களுக்கு உதவலாம்.
- **பொம்மைகள் (Puppets):** சாக்ஸ், பேப்பர் ப்ளேட்ஸ், பேப்பர் கப்ஸ், ஸ்டிக்ஸ் போன்ற பொருட்களைக் கொண்டு எளிய முறையில் பொம்மைகளை வெவ்வேறு கதாபாத்திரங்களாக உருவாக்கி கதையைத் திரும்பக் கூறவும்.
- **பொருட்கள் (Objects):** ஒவ்வொரு குழுவுக்கும் 3 வித்தியாசமான பொருட்களை கொடுக்கவும். இந்த பொருட்களைக் கொண்டு குழுக்களாக கதையை திரும்பக் கூறவேண்டும். இந்த பொருட்கள் மட்டுமின்றி வேறு சில பொருட்களையும் பயன்படுத்தலாம், ஆனால் கண்டிப்பாக இந்த 3 பொருட்களையும் உபயோகிக்க வேண்டும்.
- **வயர் & க்ளே (Wire & Clay):** வயர் அல்லது க்ளேவையோ அல்லது கிடைக்கக்கூடிய எந்த பொருட்களைக் கொண்டாவது வேதாகம கதையை திரும்பக் கூறவும்.
- **ஷராட்ஸ் (Charades):** வார்த்தைகளை பயன்படுத்தாமல் கதையின் காட்சிகளை நடித்துக் காட்ட வேண்டும். பார்த்து கொண்டிருப்பவர்கள் அது எந்த காட்சி என்று யூகித்துச் சொல்ல வேண்டும்.
- **சவுண்ட் எபெக்ட்ஸ் & மோஷன்ஸ் (Sound Effects & Motions):** வேதாகம கதையை மீண்டு படித்துவிட்டு கதையில் அதிகமாக பயன்படுத்தப்படும் வார்த்தை அல்லது செய்கைக்கு ஏற்ற விதவிதமான ஒலி எழுப்பவும்.

- **பொருள் (கள்) (எ.டு. துண்டு துணி, கயிறு) Object(s) (i.e. scarf, rope):** முடிந்தவரை இப்பொருட்களை கொண்டு கதையை மீண்டும் கூறவும். இதை இன்னொரு முறையிலும் செய்யலாம். ஒவ்வொரு குழுவிற்கும் 3 பொருட்களை கொடுக்கவும். அதை அவர்கள் பயன்படுத்தி கதையை மீண்டும் கூற வேண்டும்.
- **சைகைகள் (Motions):** கதையின் ஒவ்வொரு தொகுப்பிற்கும் வெவ்வேறு சைகைகளை பயன்படுத்தவும். ஒரு நபருக்கோ அல்லது ஒரு சிறு குழுவிற்கோ குறிப்பிட்ட சைகையை நியமிக்கலாம். கதையில் உள்ளவாறு அந்த சைகைகளை அடுத்தடுத்ததாக செய்துக் காட்ட வேண்டும்.
- **மனித ஸ்லைடு காட்சி (Human Slide Show):** ஒரு பெரிய துணியை திரையாக பயன்படுத்தவும். இரண்டு பிள்ளைகள் அந்த திரையை பிடித்துக் கொண்டு வேண்டும் போது ஏற்றவும், இரக்கவும் செய்யலாம். கதையில் உள்ள கதாபாத்திரங்களாக நடிக்க பிள்ளைகளை தேர்ந்தெடுக்கவும். கதையின் ஒவ்வொரு தொகுப்பும் துவங்கும் முன் திரைக்கு பின்னாக பிள்ளைகள் அவர்களுக்குரிய இடத்தில் ஒரு புகைபடத்தை போலவோ அல்லது ஓவியத்தைப்போலவோ நிற்கவேண்டும். சிறு அசைவு கூட இல்லாமல் பிள்ளைகள் நிற்கும்போது திரையை இரக்கலாம். இவ்வாறு ஒவ்வொரு காட்சிக்கும் செய்ய வேண்டும். கதைக்கேற்றாற்போல காட்சிகளும் மாறும்.
- **நடனம் (Dance):** வார்த்தைகள் அல்லது இசையை பயன்படுத்தியோ, பயன்படுத்தாமலோ நடனமாடி கதையை திரும்பக் கூறவும்.
- **பிரதான பத்து (Top Ten):** தனித்தனியாகவோ குழுக்களாகவோ பிள்ளைகள் கதையில் உள்ள முக்கியமான பிரதான பத்து நிகழ்வுகளை எழுத வைக்கவும்.
- **பத்திரிக்கைகள் (Journals):** பிள்ளைகள் அமைதியாக உட்கார்ந்து கதையில் உள்ளவைகளை பற்றியும் அது அவர்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை பற்றியும் பேச ஒரு தருனம் கொடுக்கப்படுகின்றது.

## திரும்பக் கூறும் செயல்பாடுகள் மற்றும் விளக்கங்கள்

■ **விளையாட்டு 1**

- **பந்து விளையாட்டு (Ball Game):** பந்தை பயன்படுத்தி பல விளையாட்டுகள் விளையாடலாம். பிள்ளைகள் ஒரு வட்டமாக உட்கார வைக்கவும். **"Go"** என்றவுடன் அல்லது இசை ஒலித்தவுடன் பந்தை பிள்ளைகள் கைமாற்ற வேண்டும். **"Stop"** என்றவுடன் அல்லது இசையை அமர்த்தியவுடன் பந்து யார் கையில் இருக்கிறதோ அந்த பிள்ளை கதையின் அடுத்த பகுதியை கூற வேண்டும். கூறியவுடன் மீண்டும் அப்படியே விளையாட வேண்டும்.
- **கயிறு விளையாட்டு (Rope Game):** 15 அடி நீளம் உள்ள ஒரு கயிறை எடுத்து அதின் முனைகளை முடிச்சி போடவும். கயிறை பிடித்த வண்ணம் பிள்ளைகளை வட்டமாக உட்கார வைக்கவும். **'Go'** என்று சொல்லும் போது கயிறை ஏதேனும் ஒரு திசையில் நகற்ற வேண்டும். **'Stop'** என்று சொல்லும் போது அந்த முடிச்சியின் அருகில் உள்ளவர் கதையின் அடுத்தப் பகுதியை கூற வேண்டும். கதை முழவதும் கூறும்வரை விளையாடவும்.
- **மூவர்ஸ் & ஷேக்கர்ஸ் (Movers & Shakers):** இசை ஒலிக்கும் போது பந்தை ஒருவர் மற்றவரிடம் போட வேண்டும். இசையை அமர்த்தியவுடன் பந்தை யார் பிடித்திருக்கிறார்களோ (அல்லது வட்டமாக நின்று கயிறை நகர்த்தும் போது முடிச்சி யாரிடம் உள்ளதோ) அவர் வசனத்தின் அடுத்த பகுதியை நீங்கள் குறிப்பிடும் முறையில் சொல்ல வேண்டும். **சில உதாரணங்கள்:**
- சாதாரண இடைவேளைவிட்டு
- ஒரு இடத்தில் ஓடிக்கொண்டே பாஸ்ட பார்வர்ட் முறையில்
- (நுனிவிரலில் நடக்கும்போது) இரசசியமாக கூறுதல்
- மார்ச் பண்ணும்போது கத்தி.
- ஸ்லோ மோஷனில் ஓடும்போது மெதுவாக கூறுதல்
- பின் நோக்கி நடக்கும்போது சாதாரன குரலில்
- **இசை நாற்காலி (Musical Chairs):** குழுவில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையில் ஒன்று குறைய அனைத்து நாற்காலிகளையும் வட்டமாக அடுக்கவும். நாற்காலிகள் வெளிப்புறமாக நோக்கி இருக்க வேண்டும். இசை ஒலிக்கும் போது பிள்ளைகள் கடிகார திசையில் நாற்காலிகளைச் சுற்றி வர வேண்டும். இசையை அமர்த்தியவுடன் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இருக்கையில் அமர வேண்டும். நாற்காலி இல்லாமல் நிற்பவர் கதையின் அடுத்த பகுதியை கூற வேண்டும். கதையை முழுமையாக கூறும் வரை விளையாடவும்.
- **நேரத்திற்குள் திரும்பக் கூறு (Timing the Retell):** கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் கதையை அந்த குழுவால் கூறமுடிகிறா என பார்க்கவும்.

  **டிங்கோ டிங்கோ டேங்கோ (Tingo Tingo Tango):** பிள்ளைகளை ஒரு வட்டமாக அமைக்கவும். "டிங்கோ டிங்கோ டேங்கோ" என்று கூறிக்கொண்டே ஏதேனும் ஒரு பொருளை கைமாற்ற வைக்கவும். "டேங்கோ" என்று கூறும் போது யாரிடம் பொருள் இருக்கிறதோ அவர்கள் கதையின் அடுத்த பகுதியை கூறவேண்டும். அடுத்து யார் "டேங்கோ" கூறுவார் என்று அறியாதவாறு சொற்களின் இடையே உள்ள நேரத்தை மாற்றி அமைக்கவும்.

- **வரிசையில் நில் (Line Up):** குட்டையிலிருந்து நெட்டைவரை அல்லது சிறியவர் முதல் பெரியவர் என்ற விதத்தில் பிள்ளைகளை நிற்க வைக்கவும். முதலில் நிற்கும் நபர் கதையின் முதல் சம்பவத்தைக் கூறவேண்டும். இரண்டாவதாக நிற்பவர் அடுத்த சம்பவத்தைக் கூறவேண்டும். இவ்வாறு கதை முழுவதும் கூறி முடிக்கும்வரை விளையாடலாம்.
- **பலூன்/பாள் டாஸ் (Balloon or Ball Toss):** பிள்ளைகள் 8 பேர் கொண்ட வட்டமாக அமைந்துக்கொள்ள வேண்டும். இசை ஒலிக்கும்போது அல்லது "**GO**" என்று கூறும் போது வட்டத்திற்குள் பலூனை/பாளை கை மாற்ற வேண்டும். இசையை அமர்த்தியவுடன் அல்லது "**STOP**" என்றவுடன் யாரிடம் பலூன் இருக்கிறதோ அந்த நபர் கதையின் அடுத்த பகுதியைக் கூறவேண்டும். இன்னும் கேளிக்கை நிறைந்ததாக மாற்ற வேண்டுமானால் பலூனை ஊதும் போதே அதிற்குள் சிறு கூழாங்கற்கள் அல்லது கோலிகளை போடலாம்.
- **பலூன் பாப் "சர்ப்ரைஸ்" (Balloon Pop "Surprise"):** கதையில் உள்ள காட்சிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு குழுவிற்கும் தேவையான பலூன்களை கொடுக்கவும். செயல்பாட்டை துவங்கும் முன் வேதாகம கதையில் உள்ள காட்சிகளை துண்டு பேப்பர்களில் எழுதிக் கொள்ளவும். ஒவ்வொரு பலூன்குள்ளாகவும் எழுதின துண்டு பேப்பரை ஒவ்வொன்றாக போடவும். பலூனை ஊதி கட்டவும். பலூன்களை நடுவில் வைத்துவிட்டு பிள்ளைகள் வட்டமாக நிற்க வேண்டும். நீங்கள் கூறும்போது பிள்ளைகள் பலூன் மீது உட்கார்ந்து வெடிக்கச் செய்ய வேண்டும். பின்பு அதில் உள்ள துண்டுகளை எடுத்து கதையில் உள்ளபடி வரிசைப்பட வேண்டும்.

**திரும்பக் கூறும் செயல்பாடுகள் மற்றும் விளக்கங்கள்**

## ■ விளையாட்டு II (Games II)

- **இரகசியம் கூறுதல் (Whisperings):** பிள்ளைகளை வட்டமாக உட்கார வைக்கவும். ஒரு பிள்ளையிடம் கதையின் முதல் பாகத்தை இரகசியமாக கூறவும். அந்த பிள்ளை அடுத்த பிள்ளையிடம் அந்த பாகத்தையும் அடுத்த பாகத்தையும் கூற வேண்டும். கடைசியாக இருக்கும் பிள்ளை அனைவரும் கேட்ட கதையைக் கூற வேண்டும்.
- **டைஸ் (Dice):** ஒவ்வொரு சிறு குழுவுக்கும் ஒரு டைஸ் கொடுக்கவும். முதல் நபர் அதை உருட்ட வேண்டும். "1" அல்லது "2" விழுந்தால் கதையைக் கூறாமல் அடுத்த நபரிடம் அதை கொடுக்கலாம். "3" அல்லது "4" விழுந்தால் கதையின் அடுத்த பகுதியை கூற வேண்டும். "5" அல்லது "6" விழுந்தால் பின்நோக்கி சென்று, டைஸ் வைத்திருந்தவருக்கு முன்பானவர் கதையின் அடுத்த பகுதியை கூற வேண்டும்.
- **ஸ்டோரி கார்ட்ஸ் (Story Cards):** தனித்தனி பேப்பரில் வேதாகம கதையின் வெவ்வேறு பிரிவுகளை எழுதவோ வரையவோ செய்யலாம். அதை வகுப்பில் உள்ள பிள்ளைகளுக்கு கலந்து கொடுக்கவும். பின்பு கதையின் வரிசைக்கேற்ப பிள்ளைகளை வரிசைப்பட வைக்கவும். அதை செய்வதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் கொடுக்கலாம் அல்லது கதையின் வரிசையை குறிப்பிடும் 2 அல்லது அதிகமான மாதிரிகளை எழுதி மற்ற குழுக்களுக்கு கொடுத்து எந்த குழு முதலில் முடிக்கிறது என கண்டறியலாம்.
- **சைகை மொழி (Sign Language):** நீங்களும் நீங்கள் யாரிடம் கதையை சொல்ல முயற்சிக்கிறீர்களோ அவரும் செவிடர்கள் போல பாவித்துக் கொள்ள வேண்டும். அது பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?
- **வேதாகம கதை ரீலே (Bible Story Relay):** பிள்ளைகளை அணிகளாக பிரிக்கவும். அவர்கள் நியமிக்கப்பட்ட தூரம் ஓடி திரும்ப வேண்டும். அவர்கள் திரும்ப வந்தவுடன் கதையின் அடுத்த பகுதியை கத்தி கூற வேண்டும். பின்பு அடுத்த அணிகுறிப்பிட்ட தூரம் ஓடி திரும்பும் போது அடுத்த பகுதியை கூற வேண்டும். இவ்வாறு அனைத்து அணிகளும் கதை கூறி முடியும் மட்டும் ஓட வேண்டும்.
- **க்ரா∴பிட்டி ஸ்டைல் (Graffiti Style):** க்ரா∴பிட்டி ஸ்டைலில் (வார்த்தைகளை கலந்து) வேதாகம கதையில் உள்ள சொற்றொடர்களை ஒரு போர்டில் எழுதவும். ஏதேனும் ஒரு பிள்ளையை முதல் சொற்றொடரை கண்டுபிடித்து அதிலிருந்து அடுத்த சொற்றொடரை இணைக்கும் ஒரு அம்பு கோட்டை போடச் சொல்லவும். அடுத்த பிள்ளை வந்து இந்த இரண்டாவது பகுதியிலிருந்து மூன்றாவது பகுதிக்கு ஒரு கோட்டை வரைய வேண்டும். வேதாகம கதை முழுவதும் கூறி முடியும்வரை தொடரவும்.
- **கண்ணாமூச்சி (Hide and Seek):** சிறு துண்டு பேப்பர்களில் அல்லது கார்டுகளில் வேதாகம கதையின் சொற்றொடர்களை எழுதவும். அறையை சுற்றிலும் அவற்றை வைக்கவும். பிள்ளைகளை அனுப்பி அவைகளை கண்டு எடுக்கச் செய்யவும். அதன்பின் அறையின் வாசலில் சரியான வரிசையில் நிற்கச் செய்யவும். யாராகிலும் ஒருவர் அதை வரிசையாக படித்து கதையைத் திரும்பக் கூற வேண்டும்.
- **ஸ்டோரி சேஸ் (Story Chase):** கதையின் ஒவ்வொரு பகுதியையும் சிறு கார்டுகளில் எழுதவும். ஒவ்வொரு பிள்ளையின் முதுகிலும் ஒரு கார்டை ஒட்டவும். பிள்ளைகள் தாங்களாகவே கதையை ஒருங்கிணைக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தனக்கு முன்பாக அந்த கார்டுகளை பார்க்கக்கூடிய விதத்தில் வரிசையாக நிற்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தனக்கு முன் இருப்பர் முதுகில் உள்ளதை வாசித்து கதையை திரும்பக் கூறச் செய்யலாம்.

- **யாரிடம் ஸ்டார் உள்ளது (Who's Got the Star?):** கன்ஸ்ட்ரக்ஷன் பேப்பர் [Construction paper] கொண்டு ஒரு ஸ்டார் செய்யவும். பிள்ளைகள் வட்டமாக இருக்கைகளில் அமர வேண்டும். கண்களை மூடும்படி கூறுங்கள். ஏதாவது ஒரு பிள்ளையின் இருக்கைக்கு கீழே ஸ்டாரை வைக்கவும். அவர்கள் கண்களை திறக்கும்போது யாரிடம் ஸ்டார் இருக்கிறதோ அந்த பிள்ளை கதையின் முதல் பாகத்தை கூற வேண்டும். அந்த பிள்ளை சொல்லி முடித்தவுடன் மீண்டும் அனைவரும் கண்களை மூடியிருக்கும் போது வேறொருவரின் இருக்கைக்கு கீழே ஸ்டாரை அந்த பிள்ளை வைக்க வேண்டும். கதை முழுவதும் கூறி முடிக்கும்வரை இந்த விளையாட்டை விளையாடலாம்.

**மாற்று வழி:** ஸ்டாருக்கு பதிலாக காயின் அல்லது வேறு எந்த குறியீட்டையும் பயன்படுத்தலாம்.

## கண்டறி & பதில் கேள்விகள்:

- **கண்டறி கேள்விகள்: தலை (உண்மைகள்)**
  என்னுடைய நோக்கம் கதையின் உள்ளடக்கத்தை புரிந்துக் கொள்வதாகும். கதை என்ன கூறுகிறது? கதையில் என்ன நடைப்பெற்றது? அவருடைய வார்த்தையின் மூலமாக நான் தேவனை அறிந்துக்கொள்ள விரும்புகிறேன்.



a) கதையைச் சொல்லும்போது நீங்கள் எதை கற்பனை செய்து பார்த்துக் கொண்டிருந்தீர்கள்? அது உங்களை எப்படி உணர வைத்தது.

b) நீங்கள் அங்கே இருப்பதுபோல கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? கதையைச் சொல்லும்போது எதை கேட்டு/பார்த்து/முகர்ந்தீர்கள்?

c) கதையில் எது தனித்துவம் வாய்ந்ததாக தெரிந்தது?

d) கதையில் தேவன்/இயேசு எதை அவர்களுக்கு கற்பிக்கிறார்?

e) முந்தின கதைகளில் எங்கே தேவன் இவ்வாறு செய்யக் காண்கிறோம்?

f) முன்பு கேட்ட கதைகளை ஞாபகப்படுத்தக்கூடிய எதையாகிலும் இக்கதையில் கேட்டீர்களா? எவ்விதமாக அதை தொடர்புபடுத்தினீர்கள்?

g) நம்முடைய மற்றெந்த கதைகள் ………………………………………. பற்றி பேசுகிறது?

h) எதாகிலும் புரிந்துக்கொள்ள கடினமாகவோ கஷ்டமாகவோ இருந்ததா?

i) இந்த கதை தேவன்/இயேசு மக்களோடு கொண்டிருந்த உறவை எப்படி விளக்குகிறது?

j) இந்த கதையிலிருந்து …………………………………………. தேவனோடு/இயேசுவோடு கொண்டிருந்த உறவை குறித்து என்ன கற்றுக்கொண்டோம்?

k) கதையில் தேவன்/இயேசு மக்களுக்கு எப்படி பதிலளிக்கிறார்? இது எதை காண்பிக்கிறது?

l) ………………………………………………. ன் போது தேவன்/இயேசு எப்படி பதிலளித்தார்?

m) மக்கள் எப்படி பதிலளித்தனர்…?

n) எப்படி தேவன்/இயேசு …?

o) இந்த நிகழ்விலிருந்து தேவன்/இயேசு எதை கற்பிக்கிறார் அல்லது காண்பிக்கிறார்?

p) நீங்கள் இன்றைய தினம் இவர்களைப் பற்றி என்ன கற்றுக்கொண்டீர்கள்?
   - ✓ தேவன்?
   - ✓ இயேசு?
   - ✓ இந்த கதை?
   - ✓ இயேசுவை பின்பற்றுவது என்றால் என்ன?
   - ✓ உங்களைப் பற்றி?

q) தேவன்/இயேசு எப்படிப்பட்டவர் என்று என்ன கற்றுக்கொண்டோம்?

r) மக்கள் எப்படிப்பட்டவற்றை தேர்வு செய்தனர்? அவர்கள் வேறென்ன செய்திருக்கலாம்? அவர்கள் தேர்வு செய்தவற்றின் விலைவு என்ன?

s) கதையில் உள்ள நபருக்கு நம்பிக்கை, நடத்தை அல்லது மனப்பான்மையில் எப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட்டது?

t) கதையில் தேவன்/இயேசுவை பற்றி நீங்கள் கவனித்தது என்ன?

u) தேவன்/இயேசுவை பின்பற்றுவதற்கு எது மிகவும் சவாலாக இருந்தது?

v) கதையில் உள்ள கதாபாத்திரங்கள் எப்படி ஒன்றுபட்டு அல்லது வேறுப்பட்டு காணப்படுகிறது?

w) எவ்விதத்தில் நமது நிலைமை ஒன்றுபட்டிருக்கிறது?

## கண்டறி & பதில் கேள்விகள்:

✦ **கண்டறி கேள்விகள்: இதயம் (உணர்வுகள்)**

உணர்வு பூர்வமாகவும் ஆவிக்குரிய விதத்திலும் கதையுடன் இணைப்பதே என்னுடைய நோக்கம். இது கதையை என் இதயத்தில் ஆழமாக பதியும்படி செய்யும். எவ்விதத்தில் இக்கதை என் வாழ்வோடு தொடர்புடையது? ஏன் இந்த கதை முக்கியமானது? இந்த கதை **எனக்கு** ஏன் முக்கியமானது? அவருடைய வார்த்தையின் மூலமாக நான் தேவனை நேசிக்க விரும்புகிறேன்.



a) இந்த கதையைப் பற்றி உங்களுக்கு பிடித்தது என்ன? உங்களுக்கு பிடிக்காதது எதாவது இருக்கிறதா?

b) கதையில் எது தனித்துவம் வாய்ந்ததாக உங்களுக்கு தெரிந்தது?

c) இன்றைய கதையில் மிக முக்கியமான பாகம் என நீங்கள் எதை கருதுகிறீர்கள்?

d) கதையை கேட்ட போது எப்படி உணர்ந்தீர்கள்? ஒருவேளை கதையில் இப்படி ------- இருந்திருந்தால் எப்படி எண்ணியிருப்பீர்கள்?

e) கதையை கேட்கும்போது எதை கற்பனை செய்தீர்கள்?

f) கதை சொல்லப்படும்போது எதை குறித்து ஆச்சரியப்பட்டீர்கள்?
- எப்படிப்பட்ட உணர்வுகள் என நினைக்கிறீர்கள்…?
- எந்த எண்ணங்கள் உற்சாகப்படுத்தினது…?
- அது எப்படி இருந்ததாக நினைக்கிறீர்கள்…?

g) இதை கதையில் ………………ன் இதயத்திலும் சிந்தையிலும் என்ன இருந்திருக்கும்?

h) இன்றைய கதையில் எது உங்களை ஆச்சரியப்படுத்தியது/வியப்படையச் செய்தது?

i) இன்றைய கதையில் எந்த கதாபாத்திரத்துடன் அதிகமாக உங்களை தொடர்பு படுத்திக் கொள்வீர்கள்?

j) தேவனுக்கு/இயேசுவுக்கு உண்மையில் எது முக்கியமானது என நீங்கள் நினைக்கிறீர்கள்? கதாபாத்திரத்திற்கு எது முக்கியமானது?

k) எவ்விதங்களில் நாமும் ……………………யை போல இருக்கிறோம்? எவ்விதங்களில் நாம் வேறுபடுகிறோம்?

l) இந்த கதையை கேட்டபின்பு, உங்களை நீங்கள் பார்க்கும் பார்வையானது எப்படிப்பட்ட மாற்றம் அடையும்?

m) தேவன் உங்களை எப்போதாவது பயன்படுத்தி இருக்கிறாரா?

n) நீங்கள் ஏன் காரணம் காட்டுகிறீர்கள்?

o) வேதாகமத்தில் தேவன் ஏன் இந்த கதையை வைத்திருக்கிறார் என நினைக்கிறீர்கள்?

p) தேவன்/இயேசுவைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்?

q) இன்றுவரை நீங்கள் உணராமல் இருந்த காரியம் எது?

r) இன்று நீங்கள் கேட்ட மிகவும் சுவாரசியமான ஒன்று எது?

s) இந்த கதை உங்களுக்கு எப்படிப்பட்ட சவாலை முன்நிறுத்தியது அல்லது எப்படி உற்சாகப்படுத்தியது?

## கண்டறி & பதில் கேள்விகள்:

◆ **பதில் கேள்விகள் - கைகள் (செய்கைகள்)**



கதையில் கற்றுக் கொண்டதை நடைமுறை படுத்துவதற்கும் அதற்கு பதிலளிப்பதற்கும் பரிசுத்த ஆவியின் ஒத்தாசையை நாடுவதே என்னுடைய நோக்கம். என் வாழ்க்கையில் இக்கதையை எப்படி நடைமுறை படுத்துவது?

நான் கதையிலிருந்து கற்றுக்கொண்டதை வைத்து, விசேஷமாக நான் என்ன செய்ய வேண்டும் என தேவன் விரும்புகிறார்?

அவருடைய வார்த்தையிலிருந்து நான் கற்றுக்கொண்டதை வைத்து தேவனுக்கு கீழ்படிந்து அவருக்கு சேவை செய்ய விரும்புகிறேன்.

---

a) இன்று நீங்கள் கேட்டதில் எது உங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை உங்களுக்கு ஏற்படுத்தியது?

b) இன்று நீங்கள் கற்றுக்கொண்டதிலிருந்து தேவன்/இயேசு/பரிசுத்த ஆவியானவர் நீங்கள் எதை செய்ய வேண்டும் என்று கேட்கிறார் என எண்ணுகிறீர்கள்?

c) தேவன்/இயேசு/பரிசுத்த ஆவியானவர் உங்களிடத்தில் என்ன சொல்லுகிறார் என நினைக்கிறீர்கள்?

d) இன்றைய கதையினிமித்தம் நீங்கள் எதை வேறுவிதமாக செய்ய வேண்டும்? தேவனை நீங்கள் நேசிப்பதிலும் அவருக்கு சேவை செய்வதிலும் இது எப்படிப்பட்ட வித்தியாசத்தை ஏற்படுத்தும்?

e) இயேசுவை பின்பற்றுபவராக இருப்பதென்றால் என்ன என்று இந்த கதையிலிருந்து கற்றுக்கொண்டோம்? இந்த வாரத்தில் பெற்ற உள்நோக்கை எப்படி செயல்படுத்துவது?

f) இன்று நாம் தேவன்/இயேசுவுக்கு எப்படி பதிலளிப்பது?

g) கதையை கேட்ட பின்பு, உங்கள் வாழ்க்கையை எப்படி வாழப்போகிறீர்கள்?

h) தேவனை இவ்விதமாக அறிந்துக்கொள்ள விரும்புகிறீர்களா? தேவன்/இயேசு/ஆவியானவர் உதவி செய்ய வேண்டிய அளவிற்கு உங்கள் வாழ்க்கையில் தற்போது என்ன நடந்துக் கொண்டிருக்கிறது?

i) இந்த வாரத்தில் இந்தக் கதையை யாரிடம் பகிர்ந்துக் கொள்ள முடியும்?

j) நீங்கள் எவ்விதத்தில் அவருடைய கதையில் பங்கு கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என நினைக்கிறீர்கள்?

kids around the world

www.katw.net